இது
# நம்தேசம்

‘ Registered in the department of posts of srilanka under No QD/173/news/2014

விலை : 50 ரூபா

பார்வை 01 | வள்ளுவர் ஆண்டு 2053 | மாதம் இரு இதழ் | நவம்பர் 18 - 30, 2022 | பக்கங்கள் - 08

# சமஸ்டியை ஏற்றுக்கொண்டாலே பேச்சு:
# பேரம்பேசலை தமிழர் தவறவிடக்கூடாது!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

**தமிழ்க் கட்சிகள், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் பேசுவதாக பேச்சுவார்த்தை மேசையில் போய் உட்காருவது தான், சிறிலங்கா அரசாங்கத்துக்கு தேவைப்படும் விடயமாக இருக்கிறது. அதற்கு அப்பால் பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு வருகின்றதா? இல்லையா? என்பது இரண்டாம் கட்டம். பேச்சுவார்த்தை மேசையில் உட்கார்ந்தால் சிறிலங்கா அரசை முற்றுமுழுதாக பிணையெடுத்துக் கொடுக்கும் விடயமாக இருக்கின்ற இந்த சூழலில் தமிழ்க் கட்சிகள் இந்த சந்தர்ப்பத்தை பேரம் பேசி, மிகத் தெளிவான வாக்குறுதிகளைப் பெறக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக எடுக்க வேண்டும்**

என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் செவ்வாய்க்கிழமை (15) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, ஒற்றையாட்சி முறையை நிராகரித்து, சமஷ்டியினூடாக தமிழ்த் தேசத்துக்குரிய அங்கீகாரத்தைப் பெறும் வகையிலேயே ஒவ்வொரு தமிழ்க் கட்சிகளும் தேர்தல்களின்போது மக்களிடம் ஆணையைக் கேட்கின்றனர். அந்தவகையிலேயே, தமிழ் மக்களும் தமது ஆணையைவழங்கி வந்திருக்கிறார்கள். ஒற்றையாட்சி ஒருபோதும் தீர்வுக்குரிய ஆரம்பப்புள்ளியாக இருக்க முடியாது என்பது தமிழ்த் தேசிய அரசியலைப் புரிந்துகொண்ட அனைவருக்கும் தெரிந்த விடயம். ரணில் விக்கிரமசிங்க, முன்னைய ஆட்சிக் காலங்களில் தமிழ் மக்களுடன் பேசும் சந்தர்ப்பங்களில் எப்படி நடந்து கொண்டிருந்தார் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். 2001, 2002 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தைக்கு இணங்கிய போது, சிறிலங்கா அரசின் பொருளாதாரம் இன்றைய நிலையை ஒப்பிடக்கூடிய அளவுக்கு பாரிய வீழ்ச்சியடைந்திருந்தது. போரிலும் கூட சிறிலங்கா அரசு பின்னடைவை சந்தித்திருந்த சூழலில் தான், தமிழீழ விடுதலைலப்புலிகள் இயக்கத்துடன் ரணில் விக்கிரமசிங்க போர் நிறுத்த உடன்படிக்கைக்கு சென்று, தான் சமஸ்டித் தீர்வை கொடுப்பதாக கருத்தைத் தெரிவித்திருந்தார். இறுதியில் பேச்சுவார்தைகளின் போது, தமிழீழ



விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக ஒரு வலைப்பின்னலை ஏற்படுத்தி, இராணுவ ரீதியாக விடுதலைப் போராட்டத்தை அழிப்பதற்குரிய (08ம் பக்கம் பார்க்க)

# ராஜீவ் வழக்கின் தீர்ப்பை முன்மாதிரியாக கொண்டு தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும்!

## சிறிலங்கா அரசைக் கோரும் அருட்தந்தை சத்திவேல்!



தமிழக அரசை போன்று தமிழ் மக்களின் நீண்ட கால கோரிக்கையான அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் எனும் குரலுக்கு செவிமடுத்தும், அரசியல் கைதிகளின் நன்நடத்தையை அடிப்படையாகக் கொண்டும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அரசு துரித நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்குடன் தொடர்பு பட்டவர்கள் என குற்றம் சுமத்தப்பட்டு கட ந்த 30 வருட காலம் சிறையில் அடைக் கப்பட்டிருந்தவர்களை இந்தியாவின் உச்ச நீதி மன்றம் அவர்களின் நன்னடத்தை அடிப்படையில் விடுதலை செய்திருப்பதை அரசியல் (08 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் விபச்சாரம் செய்யும் கூட்டமைப்பு:

## வினோ எம்.பி. தெரிவிப்பு

கூட்டமைப்பு ஒரு அரசியல் விபச்சார இல்லமாகவே செயற்படுவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின்பங்காளிக்கட்சிகளில் ஒன்றான ரெலோவின் பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.வினோரதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் தலைவராக செயற்படும் இரா.சம்பந்தன் உட்பட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் அனைவரும் (08 ஆம் பக்கம் பார்க்க)

# படையினருக்கு காணிகளை தாரைவார்க்கும் வடக்கு ஆளுநரின் சதிமுயற்சி முறியடிப்பு !

முப்படைகளுக்குத் தேவையான காணிகளை, வடக்கில் இருந்து தாரைவார்ப்பது தொடர்பான கலந்துரையாடலுக்கான வடக்கு ஆளுநரின் சதி முயற்சி தற்காலிகமாக முறியடிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் காணிகளை, மக்களின் விருப்பங்களை மீறி, முப்படைகளுக்கும் வழங்கும் செயற்பாட்டுக்கான கூட்டத்தை ஆளுநர் 15 ம் திகதியன்று கூட்டியிருந்த நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் மக்களும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதுகுறித்து சட்டத்தரணி சுகாஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

தென்னிலங்கையில் ரணில் ராஜபக்ச அரசு பேச்சுவார்த்தை என்ற போர்வையில் நாடகங்களை நடாத்தி, வடக்கு கிழக்கில் மக்களின் காணிகளை அபகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதனை நாம் ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

15ம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக எதிர்ப்பு போராட்டத்தை அடாவடியாக ஆளுநர் நிறுத்த முற்பட்டார். ஆகவே அவருக்கு நாம் எமது முடிவை தெளிவாக கூறியிருந்தோம். மிரட்டல்களுக்கு நாம் அஞ்ச மாட்டோம். அத்துடன் ஆளுநர் பொய்களையும் கூறினார். (08 ஆம் பக்கம் பாாக்க)

# எழுச்சி கொள்ளும் தமிழர் தேசம்!

எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் தினம் தமிழ் மக்களால் அனுஸ்டிக்கப்படவுள்ள நிலையில் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகமெங்கும் மாவீரர் துயிலுமில்லங்களிலும், அருகிலுள்ள காணிகளிலும் துப்புரவுப் பணிகள் இடம் பெற்றுவருகின்றன. பெரும்பாலான மாவீரர் துயிலுமில்லங்களில் சிறிலங்கா இராணுவத்தினர் முகாம்கள் அமைத்துள்ள நிலையில், துயிலுமில்லங்களுக்கு அருகிலுள்ள காணிகளை துப்பரவு செய்து தயார்ப்படுத்தும் பணிகளில் தமிழ் அரசியல் கட்சிப் பிரமுகர்கள், பொது அமைப்புக்கள், இளைஞர் அமைப்புக்கள் எனப் பலரும் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த சிரமதானப் பணிகளின் போது – யாழ்ப்பாணம் கோப்பாய், சம்பூர் ஆலங்குளம், மல்லாவி ஆலங்குளம், மட்டக்களப்பு தரவை மற்றும் மாவடி முன்மாரி துயிலுமில்லப் பகுதிகளில் குழப்பங்களை ஏற்படுத்தும் விதமாக, இராணுவ புலனாய்வுப் பிரிவினரும், இராணுவத்தினரும் புகைப்படமெடுத்து அச்சுறுத்தல்களில் ஈடுபட்டிருந்தனர். அத்துடன் – யாழ்ப்பாணம் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தின் முன்னாள் கட்டப்பட்டிருந்த சிவப்பு மஞ்சள் கொடிகளும் அறுத்தெறியப்பட்டிருந்தன.

இவ்வாறான இராணுவத்தினரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் மாவீரர்களை நினைவுகூர்வதற்கு தயாராகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இது நம்தேசம்
தொடர்புகளுக்கான முகவரி : இல.43, 03ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021 222 3739

# நினைவுகூருதல் சலுகை அல்ல..! உரிமை...!

தமிழ்த்தேசத்தின் – தமிழினத்தின் விடுதலைக்காய் சத்திய வேள்வியில் தங்களது இன்பங்களையும், சுகபோகங்களையும், சகல ஆசாபாசங்களையும், துறந்து தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கிய மாவீரச் செல்வங்களை நினைவுகூரும் மகத்தான நவம்பர் மாதத்தின் இறுதிவாரம் ஆரம்பமாகவுள்ளது.

பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களை படுகொலைசெய்து – வலிந்து காணாமலாக்கி – போர் நெறிமுறைகளை மீறி – பாலியல் வன்முறை செய்து – சரணடைந்தவர்களைச் சுட்டுப் படுகொலை செய்து– தடைசெய்யப்பட்ட கொத்துக் குண்டுகளையும் பொஸ்பரஸ் குண்டுகளையும் கொண்டு, கொன்றுகுவித்து, 2009 மே முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் மூலம், வீரமும் தியாகமும் செறிந்த தமிழர்களின் ஆயுதப்போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டது. சிறிலங்கா அரசுடன் இணைந்த சர்வதேச சக்திகளும் சதி செய்திருந்தன. 2009 தமிழினவழிப்பின் பின்னர் வடக்கு கிழக்கு தமிழர் தாயகமெங்கும் தமிழின விடுதலைக்காக உயிர்க் கொடையீந்த தமிழ் மக்களின் உறவுகளான மாவீரர்கள், மாமனிதர்கள், நாட்டுப்பற்றாளர்கள், தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள், இனவழிப்பு செய்யப்பட்ட தமிழ் மக்கள் ஆகியோரை நினைவு கூருவதற்கு சிறிலங்கா அரசினால் முற்றாக தடையேற்படுத்தப்பட்டிருந்தது. சிறிலங்கா அரச படையினரும், புலனாய்வாளரும், பொலிசாரும் நினைவுகூருவோரை அச்சுறுத்தியும், கைதுசெய்தும், தமிழ் மக்கள் தமது உறவுகளை நினைவுகூருவதற்குத் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர்.

உறவினர்களை நினைவுகூருவதற்கான உரிமை, சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டிருந்த நிலையிலும், நிலைமாறுகால நீதி பொறிமுறையில் நினைவுகூருதல் என்பது தடைசெய்யப்படமுடியாததாக இருந்த நிலையிலும், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தமது நினைவுகூரும் உரிமைகளை தமிழ் தரப்பினர் நிலைநாட்டத் தயங்கியிருக்கவில்லை. நினைவுகூருதல்களை முன்னெடுப்பதற்கு சிறிலங்கா அரசு தடைவிதித்திருந்தபோது – பொதுமக்கள் வீதிகளில் இறங்கத் தயங்கியிருந்த நிலையில் – தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அரச கெடுபிடிகள் காரணமாக, வீதிகளில் இறங்கத் தயங்கிய தமிழ் மக்கள், தமது வீடுகளில் அஞ்சலி செலுத்தியிருந்ததோடு, ஆலயங்களிலும் வழிபாடுகளை மேற்கொண்டிருந்தனர். சிறிலங்காவை மையமாகக் கொண்டிருந்த பூகோளப் போட்டியில் ராஜபக்ஸ அரசாங்கத்தைத் தோற்கடித்து, 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட ரணில் – மைத்திரி ஆட்சிமாற்றத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிபந்தனையற்ற ஆதரவு பெரிதும் உதவியிருந்தது. இந்த இடைவெளி தமிழ்மக்களின் அரசியல் உரிமைசார்ந்து எந்தவொரு நன்மையையும் தந்திருக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமது கைக்குள் போட்டுக்கொண்டு ஒற்றையாட்சிக்குள் தீர்வைத் திணிக்கவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்கா அரசால் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்த தமிழ் மக்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் எதுவும் நடைபெற்றிருக்காத நிலையில் கூட, சிறிலங்காவை சர்வதேச அரங்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாதுகாத்து வந்த நிலையில், மனித உரிமை விடயங்களில் அக்கறை செலுத்துவது போன்ற தோற்றப்பாடுகளைக் காட்டவேண்டிய நெருக்கடியில் இருந்த ரணில் – மைத்திரி அரசால், 2016,2017,2018 ஆம் ஆண்டுகளில் தமிழ் மக்களால் அனுசரிக்கப்பட்ட நினைவுகூருதல்களை தடுக்கமுடிந்திருக்கவில்லை என்பதே உண்மையாகும்.

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் பௌத்த – சிங்கள மக்களின் ஏகோபித்த வாக்குகளினால் கோட்டபாய ராஜபக்ஸ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில் – அரச புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்கள் காணப்பட்டபோதிலும், தமிழ் மக்களால் நினைவுகூருதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நேரடியாக தடைகளை ஏற்படுத்த முடியாத அளவுக்கு சர்வதேச நாடுகள் சிலவற்றின், ராஜபக்ஸ அரசாங்கம் மீதான எதிர்ப்புணர்வும் காரணமாகின. இதன் காரணமாக, 2020 ஆம் ஆண்டு நீதிமன்றங்களூடாக பொலிசார் தடைகளைப்பெற்று – பொது நிகழ்வாக மாவீரர் தினத்தை மாவீரர் துயிலுமில்லங்களில் அனுஸ்டிக்கமுடியாமல் செய்திருந்தது. ஆயினும் தமிழ் அரசியல் கட்சிகளின் அலுவலகங்களிலும், யாழ்.பல்கலைக்கழகத்திலும், ஆலயங்களிலும், ஏனைய சில பொது அமைப்புக்களினாலும் சிறிய அளவில் நினைவுகூருதல்கள் ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2021 ஆம் ஆண்டும் மாவீரர் துயிலுமில்லங்களில் நினைவேந்தல்களைத் தடை செய்வதற்கு நீதிமன்றங்களூடாக பொலிசார் விண்ணப்பித்திருந்த நிலையிலும், ஒரு சில நீதிமன்றங்களில் தமிழ் சட்டத்தரணிகளால் பொலிசாரின் நடவடிக்கைகளுக்கு எதிரான செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. வடக்கு – கிழக்கின் அனைத்துத் துயிலுமில்லங்களையும் சுற்றி சிறிலங்காவின் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டிருந்த நிலையிலும் – பருத்தித்துறை, சாட்டி மற்றும் வன்னிவிளாங்குளம் போன்ற பகுதிகளில் பொதுமக்களின் பங்குபற்றல்களுடன் நினைவேந்தல்கள் எழுச்சியுடன் நடைபெற்றிருந்தன. அதிரடிப்படையினரின் அச்சுறுத்தல்களையும் தாண்டி தமிழ் மக்கள் பேரெழுச்சிகொண்டிருந்தனர்.

நாட்டில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார நெருக்கடிகளும், அதனால் ஏற்பட்ட போராட்டங்கள் காரணமாக, ஜனாதிபதியாக இருந்த கோட்டபாய ராஜபக்ஸ நாட்டிலிருந்து தப்பியோடி தனது பதவியைத் துறந்த நிலையில், ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார். ஒரு தேசியப்பட்டியல் ஆசனத்துடன் பாராளுமன்றம் புகுந்த ரணில் விக்கிரமசிங்க – ஜனாதிபதியாக காரணமானது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியாகும். அரசியல், பொருளாதார மாற்றங்களுக்காக தென்னிலங்கை மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போது அதற்கு தூபமிட்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தான் ஜனாதிபதியானதும், போராட்டங்களை அடக்கி ஒடுக்குவதிலும், பயங்கரவாத தடை சட்டம் மூலம் போராட்டக்காரர்களை சிறைகளில் அடைப்பதிலும் முனைப்புகாட்டிவருகிறார். தென்னிலங்கை மக்கள் தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் மற்றும் ஏமாற்றங்கள் தொடர்பாக வீதிகளில் இறங்கிப் போராடமுடியாத அளவுக்கு பயங்கரவாத தடைச்சட்டத்தை சிங்கள மக்களை நோக்கியும் திருப்பிவிட்டிருக்கிறார்.

இன்றைய நாட்டின் பொருளாதார அரசியல் நெருக்கடிக்கு, தம்மை ஏமாற்றிய ஆட்சியாளர்களே காரணமென சிங்கள மக்கள் உணர்ந்து வரும் நிலையில், இன்று சிங்கள மக்கள் மீது பாய்ந்துள்ள பயங்கரவாத தடைச் சட்டம், தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளும் எவ்வாறு இருந்திருக்கும் என சிங்கள மக்களிடையே பேச வைத்திருக்கிறது. சிறிலங்கா அரசாங்கத்தின் ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளுக்கு தமிழ் மக்கள் அஞ்சி அடிபணியப்போவதில்லை.

அதேவேளை – அரச அடக்குமுறையால் தடுக்க முடியாத நினைவேந்தல்களை அரச கூலிகள் மூலம் குழப்பும் நடவடிக்கையில் ரணில் அரசாங்கம் ஈடுபடும் என்பதை தமிழ் மக்கள் உணர்ந்து, அதற்கு இடம் கொடுக்காத வகையில் செயற்படவேண்டும். கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்றிருந்த தியாகி தீலீபனின் நினைவேந்தல் விடயம் இதற்கு முக்கிய எடுத்துக்காட்டாகும். அரச அடக்குமுறை கொண்டு தடுக்க முடியாத ரணில் அரசாங்கம், தனது அரச புலனாய்வு கைக்கூலிகளான ஜனநாயகப் போலிகளைப் பயன்படுத்தி குழப்பம் விளைவித்தமையை தமிழ் மக்கள் மறந்துவிடக்கூடாது.

பணிந்தும் குனிந்தும் சேவகம் செய்யாமல், தமிழினத்தின் மானமே பெரிதென தமது கொள்கையாக வரித்துக் கொண்ட எமது உறவுகளை அஞ்சலித்து விளக்கேற்றுவது தமிழ் மக்களின் வரலாற்றுக் கடமையும், உரிமையும் ஆகும்.

# அரசியல் பேசக்கூடாது எண்டு சொல்லிறவயளின்ர அரசியலையும் விளங்கிக்கொள்ள வேணும்...!

வணக்கம்!

நான் கல்வயல் கனகசிங்கம்

எப்பிடி உங்கட பாடு?

ஏதோ என்ர பாடு போகுது..

இந்த மாதம் மாவீரர் வாரம் வருகுதெல்லோ! அன்றையநாட்களில்புனிதமானவர்களை நினைத்து அஞ்சலி செய்ய தமிழ் மக்கள் தயாராகி வருகினம். தேசத்திற்காக தங்களை அர்ப்பணித்திருந்த தங்கட கணவனையும், பிள்ளைகளையும், சகோதரங்களையும், உறவினர்களையும் நினைச்சு, அவர்களின் இலட்சிய கனவுகளுக்கு விசுவாசமாக நடப்போம் எண்டு தமிழ் மக்கள் சபதம் எடுக்கிற நாள் நெருங்கிக் கொண்டிருக்கு.

இந்த மாவீரர் நாளை திட்டமிட்டு குழப்ப அரச கைக்கூலிகளை வைத்து பல முயற்சிகளை சிறிலங்கா அரசு செய்துகொண்டிருக்கு பாருங்கோ.




அது எப்பிடி எண்டு கேக்கிறீங்களோ?

கடந்த செப்ரெம்பர் மாதம் நடந்த தியாகி திலீபனின் நினைவேந்தலில் குழப்பம் விளைவித்த சிறிங்காவின்ர அரச புலனாய்வு முகவர்களும் இந்தியாவின்ர கைக்கூலிகளும் தான் அவையள் பாருங்கோ...!

இவையள் எல்லோருக்கும் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13 ஆம் திருத்தம், தமிழ் மக்களுக்கான தீர்வின் ஆரம்பப்புள்ளி கூட இல்லை எண்டுசொன்னால், கோவம் பொத்துக்கொண்டு வரும் பாருங்கோ!

அது எப்பிடி என்று கேக்கிறீங்களோ.....!

தியாகி திலீபனின் நினைவேந்தலை ஆறு வருடமா நினைவேந்தல் குழு ஒண்டு செய்து வருகினம். போனவருடம் கூட நெருக்கடியான காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அஞ்சலி செலுத்தியபோது, பொலிசாரால் கைது செய்யப்பட்டுமிருந்தார். இப்பிடியெல்லாம் இருக்க, நெருக்கடியான நேரத்தில தியாகி திலீபனின் நினைவிடத்தை எட்டிக் கூட பார்க்காத போலிகள் சிலரை வைச்சு, நினைவேந்தல் தொடங்கி மூன்று நாளுக்குப் பிறகு அரச இந்திய முகவர்கள், 'தியாகி திலீபன் நினைவேந்தல் கட்டமைப்பு' என்ற பெயரில் குழுவொன்றை அமைக்க வெளிக்கிட்டிச்சினம் பாருங்கோ!

தியாகி திலீபனின் ஐந்து அம்சக் கோரிக்கைகளும் மிக சாதாரணமானவை. அந்த கோரிக்கைகள் இன்றுவரை நிறை வேற்றப்படவில்லை. தியாகி திலீபனின் அகிம்சைப் போராட்டமும், வீர மரணமும் தமிழ்த் தேசிய அரசியலுக்காகதான் நடந்திருந்தது. அத்தகைய நினைவேந்தலில், தியாகி திலீபனின் இலட்சிய அரசியல் பேசக்கூடாதாம் எண்டு கிளம்பின கூட்டம் தான் – இந்த புதிய நினைவேந்தல் கட்டமைப்பு பாருங்கோ!

தியாகி திலீபன் எந்த இலட்சியத்துக்காக இறந்தாரோ! எந்த அரசியலுக்காக இறந்தாரோ! அந்த அரசியல் பேசக்கூடாது எண்டு சொல்லுறவயளின்ர அரசியலை விளங்கிக் கொள்ள வேணும் பாருங்கோ!

இப்பிடிப்பட்ட நோக்கத்துக்காக கிளம்பின, புது நினைவேந்தல் கட்டமைப்புக்குள்ள போய்க்குந்தியிருந்தவங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறியள்...?

தியாகி திலீபனின் நினைவேந்தலைக் குழப்பிய கையோட, ஜனநாயக போலிகள் எஜமான்களை சந்திக்க புதுடில்லி போயிருந்திச்சினம். அங்க போய் தமிழருக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை 13ஆம் திருத்தம் வேணுமாம் எண்டு கேட்டிருக்கினம்.

இது பெரிய பகிடி பாருங்கோ!

1987 ஆம் ஆண்டு முதல் 13 ஆம் திருத்தம் இலங்கை அரசியலமைப்பில இருந்தும், இந்த நடைமுறையில் உள்ள சட்டத்தால் வடக்கு கிழக்கில் நடைபெறும் நில ஆக்கிரமிப்புக்களையும், சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பையும், தடுக்க முடிஞ்சிருக்குதோ?

ஆகக் குறைஞ்சது, தமிழர் பிரதேசங்களில் அரசால் திட்டமிட்டு ஊக்குவிக்கப்படும் சமூக சீரழிவுகளையெண்டாலும், கட்டுப்படுத்த முடிஞ்சுதோ?

காணி அதிகாரமும் பொலீஸ் அதிகாரமும் இல்லாத 13 ம் திருத்தம் ஒண்டுக்கும் உதவாது எண்டு தெரிஞ்சு கொண்டும், கேட்கிற தரப்புக்களைப் பற்றி தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ளவில்லை எண்டால் தமிழ் இனம் அழியிறது உறுதிபாருங்கோ!

சரி இதை விடுவோம்..!

தியாகி திலீபனின் நினைவேந்தல் முடிஞ்ச பிறகு – குருந்தூர் மலை நில ஆக்கிரமிப்புக்கு எதிராக போராட்டம் நடந்தது. குழந்தைகள், சிறுவர் உட்பட 50க்கும் மேற்பட்டவர்கள் இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட பிரம்படி படுகொலை நினைவேந்தல் நடந்தது. யாழ். போதனா வைத்தியசாலை படுகொலை நினைவேந்தல் நடந்தது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் ஓ.எம்.பி. அலுவலகம் வேணாம் எண்டு யாழ்ப்பாணம் கச்சேரியை முடக்கியிருந்திச்சினம். காணி அபகரிப்புக்கெதிரா ஆளுநர் செயலகத்தை மறிச்சு போராட்டம் நடந்திச்சுது, மாவீரர் துயிலுமில்லங்கள் இராணுவ கெடுபிடிகளுக்கு மத்தியிலும் துப்புரவாக் கப்பட்டுக்கொண்டிருக்கு பாருங்கோ!

இந்த செயற்பாடுகள், போராட்டங்கள் எல்லாவற்றிலும் கஜேந்திரகுமாரின்ட முன்னணிக்காரங்கள் தான் முன்னுக்கு நின்று செய்திருக்கிறாங்கள் பாருங்கோ!

தியாக தீபம் நினைவேந்தலைக் குழப்பிய வேலன் சுவாமியும் – ஜனநாயக போலிகளை வைத்து அவங்களோட இழுபட்டுத் திரிஞ்சவையளும் பிறகு வந்த நினைவேந்தல்களின் போதும், போராட்டங்களின் போதும் ஏன் வரவில்லை எண்டு ஜோசிச்சீங்களோ!

சரி.... சரி... கனக்க யோசிக்காதையுங்கோ..!

இப்பவாவது......

நினைவேந்தலில் அரசியல் செய்யாதை யுங்கோ எண்டு சொல்லிக்கொண்டு அரசியல் செய்யிறவங்களின்ட நோக்கத்தை விளங்கிக் கொள்ளுங்கோ!

எனக்கு நேரம் போகுது....

நான் போய்ட்டு வாறேன்.

## தேசத்தின் குறிப்புகள் 01

- லீமா -

# எரிக் சொல்ஹெய்மும் எரியுண்ட தேசமும்

**நா**ன்காம் கட்ட ஈழப்போர் ஆரம்பிப்பதற்கு முன்பு, நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையின் போது எரிக் செல்சொல்ஹெய்ம் சமாதான தூதுவராக பாத்திரமேற்றிருந்தார். 1998 ஆம் ஆண்டு முதல் 2006 வரை சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்குமிடையில் சமாதானத் தூதுவராகவும் செயற்பட்டிருந்தார். குறித்த சமாதான உடன்படிக்கையின் பிரகாரம் யுத்த நிறுத்தம் இடம் பெற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருந்தன.

சிறிலங்காவில் மட்டுமன்றி சூடான், நேபாளம், மியான்மார், புருண்டி ஆகிய நாடுகளுக்கும் எரிக்சொல்ஹெய்ம் பங்களிப்பு செய்திருந்தார். ஆனால், எரிக்சொல்ஹெய்ம் பங்களிப்பு செய்த பேச்சுவார்த்தைகள் அனைத்தும் பாதிக்கப்பட்ட தரப்பினரை பலவீனப்படுத்தும் கோணத்திலேயே நடைபெற்றிருந்தாக பலரும் குற்றச்சாட்டியுள்ளனர். எரிக் சொல்ஹெய்ம் உள்ளிட்ட நோர்வே தரப்பினர் சமாதான பேச்சுவார்த்தையில் தலையீடு செய்தபோது பாரிய விமர்சனங்களையும் அக்காலப்பகுதியில் எதிர்நோக்கியிருந்தனர்.

2003 ஆம் ஆண்டு இலங்கையின் அப்போதைய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அனுசரணையாளராகவிருந்து சர்வதேச பரப்பில் நன்கு அறியப்பட்டவர். பேச்சுவார்த்தை என்னும் பெயரில் விடுதலைப் போராட்டக்காலத்தை பல வருடங்களாக இழுத்தடித்து, 2006 இன்பின்னர் தமிழரை நட்டாற்றில் விட்டுச் சென்றவரும் இவரே ஆவார்.

மேற்கு வல்லரசுகளின் இரண்டு முகமூடிகளில் போர்முகமாக இஸ்ரேலும் மென்முகமாக நோர்வேயும் காணப்படுகின்றது.

ளது. ஏற்கனவே தனது மைத்துனரான றுவான் விஜேவர்தனவை காலநிலை மூத்த ஆலோசகராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்திருந்தார். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தேசியப்பட்டியல் மூலம் ஒரு ஆசனமே ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்திருந்தது. அதனை வைத்தே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகியுள்ளார் என்பது அனைவரும் அறிந்தவிடயமே. ரணில் மைத்துனரும் முன்னாள் எம்.பியுமான றுவான் விஜேவர்தனவுக்கு காலநிலை மூத்த ஆலோசகராக பதவி வழங்கப்பட்டது என்பது, ரணிலின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர் என்பதால் மட்டுமேயாகும். இதனடிப்படையில் நோக்கும் போது, றுவான் விஜேவர்த்தனவுக்கு நிகரான – நம்பிக்கைக்குரிய ஒருவராகவே எரிக் சொல்ஹெய்மையும் ரணில் நியமித்துள்ளார் என்பதுடன் ரணிலின் மேற்குலகம் சார்ந்த நம்பிக்கையை வெளிப்

கூட்டு என்பது – தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசு மேற்கொண்ட இனவழிப்பை மூடிமறைக்கவும், இதனால் ஏற்படக்கூடிய சர்வதேச நெருக்கடியில் இருந்து சிறிலங்காவைப் பிணையெடுக்கவும் பின்னப்படும் சதியின் பாகமா? என்று சந்தேகிப்பதில் தவறில்லை. இன்றும் கூட, 2009 இல் நடைபெற்ற தமிழினவழிப்பினூடாக சர்வதேச நீதிப்பொறிமுறையை அடையக்கூடிய வழிமுறை இருக்கிறது. சிறிலங்கா அரசாங்கம் காலஅவகாசம் பெறுவதற்கான சர்வதேச தீர்மானங்களுக்கும், உள்ளகப்பொறிமுறைகளுக்கு ஆதரவாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் அனுசரணை வழங்கியிருந்தமையால்தான், 13 வருடங்களாக மறுக்கப்பட்ட நீதியாகவே

வருகையை பார்க்கலாம். 2009 இன் முன்பு வெளிச்சக்திகளிடமிருந்து சிறிலங்காவின் கூட்டு இறைமையையும் பாதுகாத்து வந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தை – அழித்ததன் விளைவால், சிங்கள மக்களும் சேர்ந்தே அழிந்துகொண்டிருக்கின்றனர் என்பதே இன்றைய கசப்பான உண்மையாகும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சர்வதேச காலநிலை தொடர்பான ஆலோசகராக எரிக்சொல்ஹெய்முக்கு வழங்கப்பட்ட குறித்த நியமனத்தின் மூலம் சிறிலங்காவின் பூகோள ரீதியான முக்கியத்துவத்தினை விளங்கிக் கொள்ள முடியும். சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்திலும் பணியாற்றியிருந்த எரிக்சொல்ஹெய்ம் அதிலிருந்தும் பதவிவிலக நேர்ந்திருந்தது. இவ்வாறு எரிக் சொல்ஹெய்ம் புகுந்த இடங்கள் உருப்பட்டதாக வரலாறில்லை. எரிக் சொல்ஹெய்ம் புகுந்துள்ள சிறிலங்காவையும் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

அதுவரை –

படுத்தும் செயற்பாடுமாகும்.

சிறிலங்காவின் சர்வதேச காலநிலை ஆலோசகராக நியமிக்கப்பட்ட எரிக்சொல்ஹெய்ம், சிறிலங்காவிற்கு விஜயம் செய்தபோது, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸவையும் சந்தித்திருக்கிறார். மக்கள் போராட்டங்களால் கலைக்கப்பட்ட ராஜபக்ஸக்களின் ஆசீர்வாதத்துடன் – ராஜபக்ஸாக்களைப் பாதுகாத்து – அவர்களிடமே பக்குவமாக ஆட்சியை மீண்டும் ஒப்படைப்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக ராஜபக்ஸக்கள் கொண்டுந்தனர். எனவே – இனப்படுகொலையாளிகளான ராஜபக்ஸக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முதன்மைப் பணியாகும். இங்கே இன்னுமொரு சூட்சுமமான விடயமும் இருக்கின்றது. அது என்னவெனில் – எரிக்சொல்ஹெய்ம் சந்தித்துள்ள இன்னுமொரு தரப்பு சுமந்திரன் சாணக்கியன் போன்றவர்கள். ஐ.நாவின் மனித உரிமைப் பேரவையால் கொண்டு

இருந்துவருகின்றது. தேர்தல்களில் சமஸ்டிக் கோசமிடும் கூட்டமைப்பு, நடைமுறையில் ஒற்றையாட்சிக்குட்பட்ட







> “சிறிலங்காவில் மட்டுமன்றி சூடான், நேபாளம், மியான்மார், புருண்டி ஆகிய நாடுகளுக்கும் எரிக்சொல்ஹெய்ம் பங்களிப்பு செய்திருந்தார். ஆனால், எரிக் சொல்ஹெய்ம் பங்களிப்பு செய்த பேச்சுவார்த்தைகள் அனைத்தும் பாதிக்கப்பட்ட தரப்பினரை பலவீனப்படுத்தும் கோணத்திலே நடைபெற்றிருந்தாக பலரும் குற்றச்சாட்டியுள்ளனர்”

அந்த மென்முக முகமூடியை அணிந்து தமிழ்த் தேசத்தின் அழிவுக்கு காரணமானவரே எரிக் சொல்ஹெய்ம். 2006 இல் எரிக்சொல்ஹெய்மின் முகமூடியும் கிழியத் தொடங்கியிருந்தது.

2003 இல் சிறிலங்காவின் சமாதானதூதுவராக சிறிலங்காவிற்குள் நுழைந்து தமிழர் தேசம் அழிவடைவதற்கு வித்திட்ட எரிக் சொல்ஹெய்ம், ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச் சூழல் நிகழ்ச்சித் திட்டத்தின் தலைவராக கடமையாற்றியபோது பல்வேறு குற்றசாட்டுகளின் பேரில் 2018 ஆம் ஆண்டு பதவி விலக நேரிட்டது. இவரின் மோசடிகள் காரணமாக நெதர்லாந்து உட்பட்ட நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச் சூழல் நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிதி உதவியை வழங்க மறுத்திருந்தன.

எரிக் சொல்ஹெய்ம் கடமையில் இருந்த வெறும் 22 மாத காலப்பகுதியில் 500,000 அமெரிக்க டொலர்களை விமானபயணங்கள் மற்றும் ஹோட்டல்களில் செலவிட்டதாக கணக்குக் காட்டியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக கணக்காய்வில் வெளிப்படுத்தியிருந்ததாக தகவல்கள் உள்ளன. 80 வீதமான நாட்களை தமது தலைமையகத்துக்கு வெளியே செலவிட்டிருந்தார் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் குற்றம் சாட்டியது. இதேபோன்று தனது பதவி நிலையை பயன்படுத்தி மனைவியை பிரபல நிறுவனம் ஒன்றில் வேலைக்கு சேர்ந்தார் என்கிற குற்றச்சாட்டும் சுமத்தபட்டு இருந்தது.

இவ்வாறான மோசடி குற்றச்சாட்டுக்கள் காரணமாக ஐக்கிய நாடுகள் சபை செயலாளரின் அழுத்தத்தின் காரணமாக எரிக் சொல்ஹெய்ம் பதவி விலகி இருந்தார். இல்லையேல் பதவி விலக்கப்பட்டிருப்பார்.

இவ்வாறான குற்ற பின்னணி உள்ள எரிக் சொல்ஹெய்முக்கு இலங்கையின் சர்வதேச காலநிலை ஆலோசகராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமனம் வழங்கப்பட்டுள்

வரப்படும் தீர்மானங்களை வலுவிழக்கச் செய்து இனப்படுகொலையாளிகளான ராஜபக்ஸக்களை பன்னிரெண்டு வருடங்களாக பிணையெடுத்து வந்தவர்களும் இவர்களேயாவர்.

ஐ.நாவின் மனித உரிமைப் பேரவை மூலம் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை என சட்டப்புலமைவாய்ந்த சுமந்திரனுக்கு நன்கு தெரிந்திருந்தும் – தமிழ் மக்களுக்கான நீதி கிடைப்பதை விட – ராஜபக்ஸக்களை சர்வதேச நெருக்கடியிலிருந்து பிணையெடுப்பதே சுமந்திரனின் முதன்மை பாத்திரமாக இருந்தது. தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பை சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கோ அல்லது சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றிற்கோதான் கொண்டு செல்லவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தபோதும், கஜேந்திரகுமாரின் தமிழர் விவகாரம் தொடர்பான தெளிவான பார்வையை சுமந்திரன் மறுதலித்தே வந்திருந்தார். குற்றவியல் நீதிமன்றுக்கு தமிழர் விவகாரத்தைக்கொண்டுசெல்வதுசாத்தியமில்லை எனவும், தமிழினப்படுகொலையை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் இல்லை என்றும் கூறி, தமிழ் மக்களை பன்னிரெண்டு வருடங்களாக ஏமாற்றிவந்த சுமந்திரன், 2022 இல் நடைபெறவிருந்த மனித உரிமை பேரவையின் ஜெனீவா அமர்விற்கு முன்னர், தமிழ் மக்களின் விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரபடுத்தவேண்டும் என்று முதன்முதலில் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். ஐ.நா.வின் மனித உரிமை பேரவையில் கொண்டுவரப்படும் ஒவ்வொரு தீர்மானங்களையும், பாதிக்கப்பட்ட தமிழ் தரப்பினரின் பிரதிநிதிகளின் எந்தவொரு எதிர்ப்புமில்லாதது போன்று காட்டி, உள்ளக விசாரணைக்குள் தமிழ் மக்களின் நிலைமாறுகால நீதிக் கட்டமைப்பை முடக்குவதற்கு மேற்குலகம் பாவித்த கைப்பொம்மை தான் சுமந்திரனாவார்.

அப்படியானால் ராஜபக்ஸாக்கள்–ரணில் – எரிக்சொல்ஹெய்ம் – சுமந்திரன், சாணக்கியன்

13 ஆம் திருத்தத்தை ஆதரிக்கும் இந்திய – மேற்கு எடுபிடிகளாகவே செயற்பட்டு வருகின்றனர்.

இன்று – பொருளாதாரத்தில் வீழ்ந்து கிடக்கும் சிறிலங்கா – கஜானாவில் டொலர்கள் இன்றி தத்தளிக்கும்வேளை, அதுவும் அரச ஊழியர்களுக்கே சம்பளம் கொடுக்கத் தள்ளாடும் ஒருநாடு, சர்வதேச காலநிலையைக் காப்பாற்றப் போகிறேன் என்று கவலைகொண்டு எரிக்சொல்ஹெய்முக்கு டொலர்களை வாரி வழங்கப்போகிறது என்று சொன்னால் நிச்சயமாக இது ஆசியாவின் அதிசயம்தான்.

சதிகளை எதிர்கொள்வது தமிழர் தேசத்துக்குப் புதியதல்ல. தனது பூகோள நலனை அடைவதற்காக தமிழர்களுக்கு ஆயுதங்களையும் பயிற்சிகளையும் வழங்கிய இந்தியாவின் முகமூடி, 1987 இலங்கை இந்திய ஒப்பத்தத்துடன் கிழிந்தது. அதேபோன்று சமாதான வேடமிட்டு வந்த மேற்கின் முகவரான நோர்வேயினதும், அதன் செல்லப்பிள்ளை எரிக்சொல்ஹெய்மினதும் முகமூடி 2006 இல் கிழிந்தது. இத்தகைய சதிகளை தமிழர் தரப்பின் இலட்சிய வேட்கை தவிடுபொடியாக்கியிருந்தது. இவற்றுக்கு அப்போதிருந்த தமிழர் தரப்பின் உறுதியான தலைமைத்துவம் பிரதான காரணமாகும்.

2009 வரையான தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமானது, வெளிச்சக்திகளிடமிருந்து சிறிலங்காவின் கூட்டு இறைமையையும் பாதுகாத்திருந்தது. சிங்கள தேசமானது தமிழ்த் தேசத்தின் இறைமையை அழிக்க முற்பட்டதன் விளைவாக சிங்கள தேசத்தின் இறைமையையும் சேர்த்தே அழித்து வருகின்றது. சிறிலங்காவை முற்றாக விழுங்கப்போகும் பூகோள அரசியலின் பகுதியாகவும் எரிக்சொல்ஹெய்மின்

மூன்றாம் கட்ட ஈழப்போரில் தமிழீழ விடுதலைப்புலிகள் கோலோச்சியிருந்த நேரத்தில் சிறிலங்கா அரசுக்கும் – விடுதலைப் புலிகளுக்குமிடையே நோர்வேயின் சமாதானத் தூதுவராக எரிக்சொல்ஹெய்ம் செயற்பட்டிருந்தமை பற்றியும் – பக்கச் சார்புகள் மற்றும் சூழ்ச்சிகள் மூலம் விடுதலைப்புலிகளை அடிபணிய வைக்கலாம் என்ற சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரல் பற்றியும் – சமாதானப் பேச்சுவார்த்தை என்ற சொல்லாடலின் பின்னணியில் நடைபெற்ற விடயங்கள் தொடர்பாகவும் இந்த நீண்ட தொடர் அலசப்போகின்றது.

2001 ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி சிறிலங்கா ஒரு பாராளுமன்றத் தேர்தலைச் சந்த்தித்தது. தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு சமரசத் தீர்வு காண்பது, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது என்பனவே தேர்தற் பிரசாரத்தின் மையமாக இருந்தது. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி சமாதானத்தை நிலைநாட்டவும், விடுதலைப்புலிகளுடன் சமரசப் பேச்சுக்களை நடத்தவும் சிங்கள மக்களிடம் ஓர் ஆணையைக் கேட்டிருந்தது. சிங்கள பௌத்த பேரினவாத மனநிலை கொண்ட அரசுகள், சிங்கள மக்களிடம் சமாதானத்துக்கான ஆணையைக் கேட்பதன் மூலமே தேர்தலில் வெற்றியடையலாம் என்ற நிலையை தமிழீழ விடுதலைப்போராட்டம் ஏற்படுத்தியிருந்தது.

தொடரும்...

# செய்த தவறுகளுக்கு இந்தியா பிராயச்சித்தம் தேடிக்கொள்ள வேண்டும்!

மு. ஈழத்தமிழ்மணி

ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் பங்கு மிக அதிகம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. தமிழ் மக்களும் இந்தியாவை அதிகளவு நேசித்துவந்ததும் சாதாரணமானதொன்றல்ல. இது வரலாற்று ரீதியாகவும், உணரப்பட்டதொரு விடயமாகும்.

ஈழத்தமிழ் மக்களின் நியாயமான போராட்டங்கள் அகிம்சை வழியிலும் சரி, ஆயுதவழியிலும் சரி முன்னெடுக்கப்பட்டிருந்த காலப் பகுதிகளில் இலங்கை அரசும் படைகளும் தமிழர்கள் மீதான ஒடுக்கு முறைகளைக் கையாண்டு அடக்கி ஒடுக்கி அழித்த வரலாறுகளை எழுபத்தைந்து வருடங்களாக தமிழர்கள் சுமந்துகொண்டிருக்கின்றனர்.

1963 ஆம் ஆண்டு யூலை மாதம் இடம்பெற்ற தமிழர்கள் மீதான படுகொலையானது அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலிருந்த ஆட்சியாளர்களால் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது என்பது சர்வதேசம் அறிந்த உண்மையாகும். தமிழ் மக்கள் மீதான படுகொலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் இந்தியப் பிரதமரான திருமதி இந்திராகாந்தி தனது வெளிவிவகார அமைச்சரைக் கொழும்புக்கு அனுப்பிவைத்திருந்தார்.

இவரின் காலத்திலே புலிகளுக்கு இந்தியாவில் புகலிடமும் ஆயுதப்பயிற்சியும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இவரது மறைவுக்குப் பின்னர் தமிழ் மக்கள் மீதான அனுதாபம் ஆதரவு என்பன தலைகீழாக மாறிவிட்டிருந்தது. பிற்பட்ட காலங்களில் இந்ததிராகாந்தியின் புதல்வாரன ராஜீவ்காந்தி இந்தியாவின் பிரதமரானார்.

இலங்கையில் இடம்பெற்ற ஜூலைக் கலவரம், தமிழ் மக்கள் மீதான இராணுவ அடக்குமுறைகள், வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் தமது வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டமை, கிராமம் கிராமமாக தமிழர்களை சிறிலங்கா படையினர் கொன்றொழித்தமை, வடமராட்சியைத் தம்வசப்படுத்தி முழுமையான இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக, 1987 ஆம் ஆண்டு மேமாதம் ஒப்பரேசன் லிபரேசன் என்ற பெயரில் இராணுவ நடவடிக்கையை அப்போதைய சிறிலங்காவின் ஜனாதிபதியான ஜே.ஆர் ஜெயவர்த்தனா அரசாங்கம் ஆரம்பித்தது. தமிழர்கள் மீதான பெரும் படை நடைவடிக்கையை முன்னெடுத்திருந்த முப்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் சென்றிருந்தது. பல நூற்றுக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டிருந்தனர். பலர் கைது செய்து தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

இதன் பின்னர் யாழ்.குடாநாட்டைக் கைப்பற்ற சிறிலங்கா அரசு திட்டமிட்டிருந்தது. தமிழ் மக்கள் பெரும் அழிவுகளைச் சந்திக்கக்கூடிய வாய்ப்பு அதிகமாயிருந்தது. இந்தவேளையில் 1987 ஜூலை மாதம் 5ஆம் திகதி நெல்லியடி இராணுவமுகாம் மீது புலிகளின் தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்ற பின்னர், இலங்கையை மையமாகக் கொண்டிருந்த பூகோளப் போட்டியின் விளைவாக இந்தியாவின் தலையீடு ஆரம்பித்தது.

1987 இல் சிறிலங்காவின் ஜனாதிபதி ஜே.ஆரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்தியா இலங்கையில் இராணுவத் தலையீட்டை மேற்கொண்டிருந்தது. ஜூலை மாதக் கடைசிப் பகுதியில் இந்திய – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட மறுநாள் இந்திய அமைதிகாக்கும் படையினராக இந்திய இராணுவம் சிறிலங்காவுக்குள் அனுப்பப்பட்டனர். அமைதிப்படையென்ற பெயரில் தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் நிலை கொண்ட இந்திய இராணுவத்தினர், தமிழர்களுக்கு எதிரான அட்டுழியங்கள் புரிந்ததும் இதன் விளைவாக புலிகளின் தாக்குதலில் இந்தியப் படையினர் கொல்லப்பட்டதும், இதன் பின்னர் ஈடுகொடுக்கமுடியாமல் 32 மாதத்தில் இந்தியப்படையினர் சிறிலங்காவில் இருந்து வெளியேறியிருந்தது பழைய கதையானாலும், ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் , அமைதிப்படையயென்ற போர்வையில் வந்து ஆக்கிரமிப்புப் படையாக மாறி, 32 மாதங்கள் தமிழர் தாயகத்தில் அரங்கேற்றியிருந்த மிகக் கொடிய போர்க் குற்றங்களில் இந்தியாவின் கரங்களும் தோய்ந்திருக்கின்றன.




தமிழ் மக்களைப் பாதுகாப்பார்கள், பக்கத் துணையாக இருப்பார்கள் என்று நம்பிய ஈழத் தமிழர்களை கொன்றொழித்த கொடுரங்கள் யாவும், மறக்கமுடியாத வடுவாக வரலாறு பதிவுசெய்திருக்கிறது. எப்போதுமே இந்தியாவின் மீது பிரிக்க முடியாத பிணைப்பையும், அன்பையும் கொண்டிருந்த ஈழத்தமிழர்களுக்கு இந்த நிகழ்வுகள் பெரும் ஏமாற்றத்தையே விதைத்துள்ளது.

1987 ஒக்டோபர் 10 ஆம் திகதி ஈழத்தமிழர்களுக்கெதிரான போரை இந்திய இராணுவம் ஆரம்பித்தது. அன்று பிற்பகல் 1.45 மணிக்கு பின்னர் 'ஒப்பரேசன் பவன்' என்கின்ற இராணுவ நடவடிக்கையினை யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஆரம்பித்திருந்தது. யாழ்ப்பாணப் பகுதியில் ஆரம்பித்த யுத்தம் கொக்குவில் பகுதியில் தீவிரமாகியது. பெரும் இழப்புக்களைச் சந்தித்த இந்திய இராணுவத்தினர் அருகிலுள்ள பிரம்படியில் உள்ள குடியிருப்புப் பகுதிக்குள் இருந்த மக்களை சுட்டுத் தள்ளினார்கள். சிறுவர்கள், குழந்தைகள் உள்ளடங்கலாக ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஒக்டோபர் 11ஆம் 12 ஆம் திகதிகளில் இப்படுகொலைகள் நடந்தேறியிருந்தன. இதன்போது – இடம்பெயர்ந்து கொக்குவில் இந்துக் கல்லூரியில் தஞ்சமடைந்த ஐம்பதுக்குக்கும் மேற்பட்ட மக்களும் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இதேமாதம் 24 ஆம் திகதி உரும்பிராய் அன்னங்கை பகுதியில் 17 பொதுமக்கள் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். உரும்பிராய் சந்தி, மானிப்பாய், சாவகச்சேரி சந்தைப் பகுதி, வல்வெட்டித் துறை, புத்தூர், வாதரவத்தை போன்ற பிரதேசங்களில் வகைதொகையின்றி மக்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தது மட்டுமன்றி இந்தியப் படையினரின் எறிகணைத் தாக்குதல்களிலும், உலங்கு வானூர்தித் தாக்குதல்களிலும் உயிரிழந்திருந்தனர்.

32 மாத கால யுத்தத்தில் 1987 ஒக்டோபர் 21ஆம் 22ஆம் திகதிகளில் யாழ்.போதனா வைத்தியாசாலையில் மேற்கொள்ளப்பட்ட இந்திய படையினரின் நடவடிக்கை மிக மோசமானதொன்றாகும். அதேபோல், இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட வல்வெட்டித்துறைப் படுகொலைகளும் மிகக் கொடுரமானதாகும்.

சிறிலங்காவில் நிலைகொண்டிருந்த இந்தியப் படைகள் 32 மாதங்களில் 127 படுகொலைச் சம்பவங்கள் உட்பட 25,000 வரையானோர் கொல்லப்பட்டமை, 3500க்கு மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டமை, 4,000க்கும் அதிக தமிழர்கள் காணாமலாக்கப்பட்டிருந்தமை, பல ஆயிரக்கணக்கானவர் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவங்களை தரவுகள் மூலம் அறியலாம்.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் 32 மாதங்களில் இந்திய படையினர் செய்த மனித உரிமை மீறல்கள் பெரும் யுத்தக் குற்றங்களாகும். ஒப்பரேசன் பவன் இராணுவ நடவடிக்கை மூலம் இந்தியா வெல்லமுடியாததொரு யுத்தத்தை ஈழத் தமிழ் மக்கள் மீது திணித்து வரலாற்று அவமானத்தைப் பெற்றுக்கொண்டது.

சிறிலங்காவில் இந்திய அமைதிகாக்கும் படைகள், பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு 35 ஆண்டுகள் நிறைவடைந்த போதும், இந்தியப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைச் சம்பவங்களின் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றும் மக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இந்திய ஆக்கிரமிப்பு படையினரால் மேற்கொள்ளப்பட்ட பல அத்துமீறல்கள், படுகொலைகள் என்பன பல கோணங்களில் ஆராயப்படவேண்டும்.


ஓய்வு பெற்ற இந்திய இராணுவ அதிகாரியான கேர்ணல் ஹரிகரன் சில ஆண்டுகளுக்கு முன்னர் தெரிவித்திருந்த கருத்து முக்கியமானது.

சிறிலங்காவில் இந்திய அமைதிப்படை செய்தது என்ன ? என்பதை மனம் திறந்து தனது கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அவரது கருத்தின் அடிப்படையில் – இந்தியப் படைகளின் கூட்டு நடவடிக்கையின் போது, பல அப்பாவித் தமிழர்கள் பல நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டனர் என்பதையும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்ற நோயாளிகள் மற்றும் வைத்தியர்கள் உத்தியோகத்தர்கள் இந்தியப் படைகளால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மிக மோசமான மீறலாகும் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தார்.

இதே போன்று வல்வெட்டித் துறையில் இடம்பெற்ற பதுங்கித் தாக்குதலின்போது, பலநூற்றுக்கணக்கான மக்கள் 2 நாட்களில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமை பிறிதொரு முக்கியமான மீறல் சம்பவமாகும். இந்த மீறல்கள் தொடர்பில் உண்மையான விசாரணையை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதில் இராணுவத்தலைமையும், அரசாங்கமும் தவறிழைத்து விட்டதாக நான் கருதுகிறேன் என்றும் தெரிவித்திருந்தார்.

இந்திய படையினரால் தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெற்ற தமிழ் மக்கள் மீதான படுகொலைகள் யாவும் மிகமோசமான ஒன்றாகும். இதுவும் யுத்தக் குற்றங்கள் என்பதே தமிழ் மக்களின் ஆழ்ந்த கருத்தியலாகவும் உள்ளது.

தமிழினம் சந்தித்திருக்கும் அழிவுகளுக்கும் அவலங்களுக்கும் இந்தியாவும் காரணமாக இருந்துள்ளது என்பதை முள்ளிவாய்க்கால் வரையான யுத்தத்தின் முன்னும் பின்னும் ஈழத்தமிழர்கள் அறியாமலில்லை. தவறான வழிகாட்டலால் ஈழத் தமிழ் மக்களுக்கு செய்த அநீதிகளுக்கு இந்தியா பிராயச் சித்தம் தேடிக்கொள்ள வேண்டும்.



ஊடுகதிர்

# ஒப்பரேசன் ஜெரோனிமா



எஸ்.ஜி.ஆர்

**2011 மே 1**

அமெரிக்காவின் சிகாகோ நகரத்தின் வீதிகளில் உழைப்பவர்களுக்கு உரிமை கேட்டு உதிரம் சிந்திய மே தினம். அந்த தினத்தில் அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமா தனது சகாக்களுடன் தொலைக்காட்சிக்கு முன்னால் பதட்டத்துடன் அமர்ந்து அந்த காட்சியின் நேரடி ஒளிபரப்பை பார்த்து கொண்டிருந்தார். பாகிஸ்தானிலுள்ள இஸ்லாமாபாத்திலிருந்து 60 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள அப்போட்டாபாத்தில் நடக்கும் சம்பவத்தின் நேரடி ஒளிபரப்பு அது.

இருள் மண்டியிருந்த வேளையில் அமெரிக்காவின் பிளாக் ஹாக் விமானங்கள் பாகிஸ்தானின் இராணுவ பயிற்சி முகாமுக்கு மிக அருகில் பறந்து கொண்டிருந்தன. அப்போட்டாபாத்தில் இருந்த 18 அடி உயர சுற்றுச் சுவருக்கு மேலே, தடுப்புக் கம்பிகள் அமைக்கப்பட்ட அந்த கட்டடத்திற்கு 2 நுழைவாயில்கள். அதன் 3 ஆவது தளத்தில் 7 அடி உயர சுவர் ஒன்று பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்தது. தொலைபேசி இணைப்போ அல்லது இணைய தள இணைப்போ எதுவும் கிடையாது. அந்த கட்டடத்தின் மீது அமெரிக்க இராணுவத்தின் பிளாக் ஹாக் விமான பாதுகாப்புடன் வந்த ஹெலிகாப்டர் மூலம் இறங்கி , அதிரடியாக செயல்பட்டு அங்கிருந்த ஒரு மனிதனை சுட்டுக் கொன்றனர். ஒப்பரேசன் ஜெரோனிமா என்று பெயரிடப்பட்ட அந்நடவடிக்கையை அமெரிக்க கடற்படை வரிசையின் 6 ஆவது பிரிவு அதிரடிப் படையினர் மேற்கொண்டனர். இதைத் தான் அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமா தனது சகாக்களுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்தப் படுகொலை உண்மையில் உலகை மிகவும் ஈர்த்த படுகொலை. இன்னும் பலரால் நம்பமுடியாத கொலை. 10 ஆண்டுகாலம் உலகின் சக்தி வாய்ந்த இராணுவத்தால் தேடப்பட்ட ஒரு நபரின் மரணம் அங்கு நடந்தது. அமெரிக்க ராணுவம் படையெடுத்து ஒரு நபரைக் கொல்லும் அளவுக்கு அவர் சக்தி வாய்ந்தவராய் இருந்தாரா? என்ற கேள்விகள் எல்லாம் இருப்பினும் - அவரது மரணம் ஒரு முற்றுப்புள்ளியில்லை என்பது மட்டும் நிச்சயம். தொடர்கதையின் ஒரு கண்ணியாக இறந்து போனது ஓசாமா பின்லேடன். அவரது இறப்பை உறுதி செய்ததும் "உலகப் பயங்கரவாதத்திற்கு எதிராக ஈட்டப்பட்ட வெற்றியாக பின்லேடனின் மரணம் கருதப்பட வேண்டுமெனவும், உலக சமாதானத்தை விரும்பும் அனைவரும் பின் லேடனின் மரணத்தைக் கொண்டாடுவார்கள்" என அமெரிக்க அதிபர் அந்த மரண செய்தியை மிகவும் சந்தோசத்துடன் ஊடகங்களுக்கு அறிவித்தார்.



2011 ஆரம்ப காலம் வரை கூடிக் குலாவிக்கொண்டிருந்த அமெரிக்க உளவுத் துறையான சி.ஐ.ஏ.யும், பாக்கிஸ்தான் உளவுத்துறையான ஐ.எஸ்.ஐ யும் பின்லேடன் கொலைக்குப் பின்னர் பரஸ்பரம் ஏகமாக முறைத்துக் கொண்டு நிற்பது உண்மையா? என, மற்ற நாட்டு உளவு அமைப்புக்கள் பார்த்துக் கொண்டிருந்தன. அதிலும் ஆப்கானிஸ்தானுக்கு உதவி செய்ய வந்த அப்போதைய சோவியத் ரஸ்யாவுக்கு எதிராக, இந்த இரு உளவு அமைப்புக்களும் கைகோர்த்து, எந்த பின்லேடனை வளர்த்து விட்டனவோ– தற்போது அதே பின்லேடன் விவகாரத்தில் தான் முட்டி மோதிக் கொண்டு நிற்கின்றனர். பின்லேடனை அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ. சல்லடைபோட்டுத் தேடிக் கொண்டிருக்கையில் – ஐந்தாண்டு காலத்துக்கும் அதிகமாக பத்திரமாகப் பதுங்கியிருந்து நிச்சய மாக ஐ.எஸ்.ஐ.க்கு தெரியாமல் இருக்காது என்று திடமாக நம்புகிறது சி.ஐ.ஏ.

சி.ஐ.ஏ.யின் கோபம் இதுவென்றால் – பாகிஸ்தானின் உளவுத் துறையான ஐ.எஸ்.ஐ.யின் கோபம் வேறாக உள்ளது. இஸ்லாமாபாத்திலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரியாக பணியாற்றியிருந்த 'ரேமண்ட் டேவிஸ்' 2011 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இரண்டு உளவுத்துறை அதிகாரிகளான பாகிஸ்தானியர்களைச் சுட்டுக் கொன்றார். காரணம் அவர்கள் துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதாகக் கூறப்பட்டது. இந்த விவகாரம் வெடித்தபோதுதான், ரேமண்ட் டேவிஸ் வெறும் தூதுவர் மட்டுமல்ல: அவர் ஒரு சி.ஐ.ஏ.உளவாளி என்பதை ஐ.எஸ்.ஐ தெரிந்து கொண்டது. இதற்குப் பதிலடியாக இஸ்லாமபாத்துக்கான சி.ஐ.ஏ.தலைவர் யாரென்ற தகவலையும், அவரது பெயரையும் பாகிஸ்தான் ஊடகங்கள் வெளியிட்டன. இவர்களின் மோதல் குறித்த ஆராய்ச்சி இருக்கட்டும். இனி, பின்லேடனைப் பார்ப்போம்.

அமெரிக்காவால் தட்டிக்கொடுக்கப்பட்டு, ஆக்கமும், ஊக்கமும் அளிக்கப்பட்டதுதான் அல்கொய்தா இயக்கம். அதன் தலைவரான ஒசாமா பின்லேடனும் – காலமும், சூழலும் மாறிப்போய் – அமெரிக்காவை ஜென்ம விரோதியாக வரித்துக் கொண்டு, நியூயோர்க் இரட்டைக் கோபுரத் தாக்ககுதலைப் பின்லேடன் நடத்தியபோது தான் அல்கொய்தா எந்த அளவுக்கு விஸ்வரூபம் எடுத்துவிட்டது என்பதை அமெரிக்கா உணர்ந்து கொண்டது. இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு பழிவாங்க ஆப்கானிஸ்தானில் படையெடுத்து, பின்லேடனுக்கு ஆதரவாக செயற்பட்டுவந்த தாலிபான் ஆட்சியை வீழ்த்திய அமெரிக்கப்படை, அன்றிலிருந்த தொடங்கியது பின்லேடனுக்கு எதிரான தேடுதல் வேட்டை !

அப்போதிருந்து பின்லேடன் குறித்து நாளொரு செய்தியும் பொழுதொரு வதந்தியும் இறக்கை கட்டிக்கொண்டு பறந்தது. பின்லேடன் இறந்து விட்டார், அவருக்குப் புற்றுநோய், சிறுநீரகம் பழுதடைந்து விட்டது, பாகிஸ்தானுக்கு தப்பியோடிவிட்டார், ஆப்கானிஸ்தானின் மலைப் பகுதியில் தான் பதுங்கியுள்ளார், ஆப்கான் எல்லையை ஒட்டியுள்ள பாக்கிஸ்தான் பழங்குடியினப் பகுதியில் பதுங்கியுள்ளார் என்றெல்லாம் விதம் விதமாக பின்லேடன் பற்றிய தகவல்கள் வெளியாகிக் கொண்டிருந்தன. ஆனால், இவை எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல், பின்லேடனின் இருப்பிடத்தை அல்லது நடமாட்டத்தைக் கண்டறிவதில் முனைப்புடன் களமிறங்கியது அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ.. எந்தவொரு பிடிமானமும் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்த அமெரிக்காவுக்கு உலகின் மிக மோசமான சித்திரவதைக் கூடமான குண்டானாமோ சிறையில், நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அடைக்கப்பட்ட ஒரு கைதி மூலம் சில தகவல்கள் கிடைத்தன.

பின்லேடனின் இரண்டு சகோதரர்கள் தான், அவருக்குத் தகவல்களைக் கொண்டு சேர்க்கும் தகவலாளிகளாக செயற்படுகின்றார்கள் என்னும் தகவலைப் பெற்றுக் கொண்ட சி.ஐ.ஏ.அதிகாரிகள், அதன் பின்னர் பல மாதங்களாக மேற்கொண்ட தீவிர முயற்சிக்குப் பின்னர், அந்த சகோதரர்கள் யார்? என்பதை அடையாளம் கண்டனர். அதன் பின்னர் தொடர்ந்து கண்காணித்ததில் , இஸ்லாமபாத்தில் இருந்து 60 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அப்போட்டாபாத்தில் உள்ள ஒரு மர்மமான, அசாதாரணமான கட்டடம் ஒன்றுக்கு இரகசிய தபால்கள் சென்றடைவதை கடந்த ஒகஸ்ட் மாதம் உறுதி செய்தனர்.

தொலைபேசி இணைப்போ அல்லது இணைய இணைப்போ எதுவும் இல்லாத குப்பைகள் கூட வெளியே கொட்டப்படாமல் உள்ளேயே தரைக்குக் கீழ் புதைக்கப்பட்ட – இந்த அளவுக்கு பாதுகாப்பு, மற்றும் உசார்தன்மையுடன் செயற்படும் கட்டத்திற்குள் யாரோ ஒரு முக்கிய நபர் உள்ளார் என்ற முடிவுக்கு சி.ஐ.ஏ.வந்தது.

அதனைத் தொடர்ந்தே செய்மதி உதவியுடன் அந்தக் கட்டடத்துக்கு உள்ளே நடமாடுபவர்கள் குறித்து கண் காணித்தபோதுதான், நெடிய உயரம் கொண்ட ஒரு நபரை பார்த்த சி.ஐ.ஏ.அதிகாரிகள், அது பின்லேடன் தான் என உறுதி செய்தனர். இதுகுறித்து பாக்கிஸ்தான் அரசுக்கோ அல்லது அதன் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ க்கோ தெரியப்படுத்தாமல், ரகசியமாக அதிபர் பராக் ஒபாமாவிடம் தெரிவித்து ஓசாமா பின்லேடனை உயிருடன் பிடிப்பதா? அல்லது அங்கேயே தீர்த்துக் கட்டிவிடுவதா? ஏன்று ஆலோசனை நடத்தினர்.

அங்கேயே கொன்று விடுமாறு ஒபாமா உத்தரவிட்டதைத் தொடர்ந்து, ஒருவார காலம் பின்லேடன் தங்கியிருந்த வீடு கண்காணிக்கப்பட்டு, 2011 மே 01 ஆம் திகதி இரவு தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. அதன் படி கடைசி



நிமிடத்தில் பாக்கிஸ்தான் அரசுக்குக் கூட தகவல் தெரிவிக்காமால், அமெரிக்க கொமாண்டோ படையினர் நேரடியாக ஹெலிகொப்டர் மூலம் தரையிறக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து தாக்குதல் நடவடிக்கையில் பின்லேடனை சுட்டுக் கொன்றனர்.

இரண்டாம் உலகப்போரில் கொடூரமான குற்றங்களைச் செய்த கிட்லர் படையில் எஞ்சியவர்களுக்குக் கூட நியூறம்பர்க் விசாரணை நடத்தப்பட்டது. 'ஆடால்ப் சிட்ஸ் மேன்' என்ற நாஜி குற்றவாளியை ஆர்ஜன்டீனாவிலிருந்து இஸ்ரேலுக்குக் கடத்திச் சென்று விசாரணை நடத்தித்தான் கொன்றனர். ஆனால் பின்லேடன் கொலை எந்த தார்மீக நெறிகளுக்கும் உட்படாதது.

"பின்லேடனைக் கொன்று கடலில் வீசியது இஸ்லாமிய மதக் கோட்பாட்டுக்கு எதிரானது" எகிப்திய தலைமை மதகுரு சேக் முகமது அல் தயப்.

"இந்தக் கொலையில் அவர்கள் நடந்துகொண்ட விதம் உலகிலுள்ள இஸ்லாமியர்களை அவமானப்படுத்தியுள்ளது. இது அமெரிக்காவுக்கு நல்லதல்ல" லெபனான் நாட்டைச் சேர்ந்த ஓமர் பாக்ரி முகமது

"ஒரு ஆயுதமற்ற மனிதனைக் கொலை செய்தது அமெரிக்கா போன்ற ஒரு நாட்டுக்கு கேவலமான செயலாகும்" பிடல் காஸ்ரோ.

"பாகிஸ்தான் சுதந்திரத்தையும் இறையாண்மையையும் மதிக்கப்படவேண்டியது" சீன அரசின் பத்திரிகை தொடர்பாளர்.

"இந்த சம்பவத்தை முன்னுதாரணமாகக் கொண்டு இந்திய இராணுவம் பாக்கிஸ்தானுக்குள் புகுந்து அங்கே மறைந்திருக்கும் இந்தியா தேடுகின்ற குற்றவாளியைப் பிடிக்கலாம்" இந்திய கப்பற்படை தலைமை கொமாண்டர் வி.கே.சிங்.

"அமெரிக்காவின் இந்த நடவடிக்கை பாராட்டத்தக்கது" மத்திய அமைச்சர் பா.சிதம்பரம்

இந்த ஒவ்வொரு கருத்துக்குப் பின்னும் இருக்கும் அரசியலை யாரும் எளிதில் புரிந்து கொள்ளமுடியும்தானே?

பின்லேடன் அழிக்கப்பட்டு விட்டார். ஆனால் பயங்கரவாதம்? அதை விதைத்தவர்கள்? இன்னும் பல பின்லேடனை உருவாக்கியவர்கள்? கேள்விகள் காற்றில் எதிரொலித்துக் கொண்டேயிருக் கிறது.

பின்லேடன் யார்? எப்படி இவ்வ ளவு சக்தி படைத்தவரானார்? தங்கள் நாட்டில் 3000 மக்கள் இறந்ததற்கு பத்து ஆண்டு காலம் தேடுதல் வேட்டை நடத்தி, ஆப்கானிஸ்தானில் லட்சம் மக்களை படு கொலை செய்த பின்பு, பத்தாண்டு காலம் காத்திருந்து எந்த ஆதாரத்தை பின்லேடனுக்கு எதிராக அமெரிக்கா காட்டியது?

அமெரிக்கா அதன் வரலாற்றில் எப்போதுமே அதன் படுகொலைகளுக்கு ஆதாரங்களை அல்லது சட்ட விதிகளை நம்பியது கிடையாது! இது உண்மையா என்ற கேள்வி உங்களுக்கு எழுவது இயல்பு.

எனவே, அமெரிக்காவின் வரலாற் றுப் பக்கங்களுடன் ஒசாமா பின்லேடனின் வரலாற்றுப் பக்கங்களைப் பார்க்கலாமா?

## ஒப்பரேசன் ஜெரோனிமா ஒரு வரலாற்றுப் பின்னணி

பின்லேடன் மீது நடத்திய வேட்டைக்கு ஒப்பரேசன் ஜெரோனிமா என்று பெயர் சூட்டியிருந்தனர். அதிபர் ஒபாமாதான் இந்த பெயரைத் தெரிவு செய்திருந்தார். ஜெரோனிமா என்பது அமெரிக்காவை சேர்ந்த புரட்சி வீரனின் பெயர். அங்கு பூர்வ குடிகளான செவ்விந்தியர்களில் அபேச்சே என்னும் பூர்வக் குடி கூட்டத்தின் தலைவனாக இருந்தவன் ஜெரோனிமா. 1829 ஆம் ஆண்டு பிறந்த அவர் தங்கள் வாழ்க்கையை சூறையாடிய அமெரிக்காவுக்கு எதிராக பழங்குடி மக்களைத் திரட்டி போராடினான். துப்பாக்கிப் படை ஒன்றை உருவாக்கி, அமெரிக்காவுக்கே சிம்ம சொப்பனமாக இருந்தான். ஐந்தாயிரம் பேர் கொண்ட அமெரிக்கப்படை அவனைப் பல ஆண்டுகளாகப் பிடிக்க முடியவில்லை. மெக்சிகோ பகுதியிலுள்ள குகைகளுக்குள் பதுங்கித் தப்பிவந்தான். கடைசியாக 1886 ஆம் ஆண்டு அமெரிக்க படை சுற்றிவளைத்ததை அடுத்து சரணடைந்தான். பின்னர் சிறையில் அடைக்கப்பட்டு இருந்த இவன் 1909 ஆம் ஆண்டு தனது 79 வயதில் மரணமடைந்தான். ஜெரோனிமா போலவே பின்லேடனும் அமெரிக்காவுக்கு தண்ணீர் காட்டி வந்ததால், பின்லேடனைப் பிடிக்க நடத்திய இந்த வேட்டைக்கு ஜெரானிமா என பெயரை சூட்டினார்கள்.

## சிறுகதை

# பிரிவும் இணைவும்

யுத்தக் கொடுமையும், உயிரச்சமும் என்னை இந்த நாட்டிலிருந்து விரட்டிவிடவே இந்த அழகிய தேசத்தை விட்டு அந்நிய நாடு சென்ற நான், 20 ஆண்டுகள் கழிந்த பின் இன்று நாடு திரும்புகிறேன். அம்மா, அப்பா அன்புக்கினியவர்களை மீண்டும் காணும் மகிழ்வுடன் நான் வந்தாலும், கல்யாணி பற்றிய நினைவுகள் மனதை நெருடிக்கொண்டுதான் இருக்கின்றன.

ஐரோப்பிய நாட்டுக்காசு எமது வீட்டை நவீன குடியலறை, மலசலகூடம், மின்னடுப்புக்கள் கொண்ட சமையலறை என, புதுமாற்றங்களுடன் பொலிவு பெற்றுக் காட்டுகிறது. அப்பா நன்றாகத் தளர்ந்துபோனார். அம்மா அப்பாவைப் பராமரித்துக்கொண்டு பலவீனமடைந்துள்ளார். சகோதரிகள் நான் வரவுள்ளதை அறிந்து, கடந்த இரண்டு வாரங்களாக அடிக்கடி வந்து தங்கி உதவி செய்து விட்டுப்போகின்றனர். தொடர் இருமலுடன், சளித் தொல்லைக்காக மருந்தும் குடித்துத் தவித்துக் கொண்டிருக்கிறார். நான் அனுப்பிய காசு வீட்டைப் பொலிவுபெறப் பண்ணியதே தவிர, அம்மா அப்பாவை சீராக பராமரிக்கப் பயன்படவில்லை என்பதைப் புரிந்துகொண்டேன். இவ்வாறு எத்தனை பெற்றோர் தனிமையில் உழல்கின்றனரோ என எண்ணி என்னுள் மனம் வருந்திக் கொண்டேன். நான் இங்கு வந்ததால், சகோதரிகளின் பிள்ளைகள், கணவர் வந்து இரண்டு மூன்று நாட்கள் நல்ல கலகலப்பாக இருந்தனர். அப்பா, அம்மாவால் முடியவில்லை. வலியைப் பொறுத்துக்கொண்டு மகிழ்வுடன் இருப்பதாகக் காட்டிக் கொண்டார்கள்.

நண்பன் ஒருவன் தந்துவிட்ட பொதியொன்றைக் கொடுத்துவிட்டு வர எண்ணிப் புறப்பட்டேன். அதிலிருந்த முல்லைத்தீவு முகவரி கண்டு, கல்யாணியின் நினைவும் வந்தது. எப்படி இருப்பாள்? எங்கேயிருப்பாள்? இப்பயணத்தில் அவளைச் சந்தித்தால் மிகவும் நன்றாயிருக்குமே..! என மனது துடித்தது.

சிரேஸ்ட மாணவ தலைவனாக நான் இருந்த காலத்தில், இவள் கனிஸ்ட மாணவர் தலைவியாக இருந்தவள். ஆரம்பக் கல்வியை முல்லைத்தீவில் கற்றுவிட்டு இங்கே வந்து இணைந்தாள். முல்லை மண்ணின் செழிப்பும், வனப்பும் அவளது உடலை மெருகேற்றி வைத்திருக்க, நீண்ட கருநிறக் கூந்தல் பின்னழகையும் தாண்டி நீண்டு கவர்ச்சிகாட்டியது. என்மீது மரியாதையும், பிரியமும் கொண்டுள்ளாள் என்பதை உணர்ந்து கொண்டேன். அழகானவள் மட்டுமல்ல, படிப்பிலும், ஒழுங்கு கட்டுப்பாட்டிலும் கூட முதன்மையானவளாகவே திகழ்ந்தாள். சேர்ந்து செயலாற்றும் வேளைகளில் இவளது நீண்ட கண்கள் பேசிய கவிதைகளைப் புரிந்துகொள்ள முடியாத ஜடமல்ல நான். சில கட்டுப்பாடுகள், குறிக்கோள்களுடன் வாழ்ந்த என்னால் ஒருவித பிரதிபலிப்பையும் காட்ட முடிந்திருக்கவில்லை.

வாசிப்பதில் ஆர்வம் மிகுந்த அவளை, நூலகத்திலும் அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. கண்ணதாசனின் கவிதைத் தொகுப்பொன்றை தந்து 'இதை ஒரு தடைவை வாசித்துப் பாருங்கள் உங்களுக்குப் பிடிக்கும்' என்று தந்தாள். கவிதைகள் நன்றாய்த்தானிருந்தன. கூடவே, அவள் வைத்துத் தந்த கடிதமும் நன்றாகவே இருந்தது.

ஒரு நாள் மதிய இடைவேளையின்போது, அவளை தனியே சந்திக்க நேர்ந்தபோது, 'கல்யாணி நீங்கள் தந்த புத்தகம் மிக அருமை: காதலுடன் இலக்கியத்தைக் கலந்து ரசமாக்கித்தர கண்ணதாசனாலேயே முடியும்' என்றேன். அவளது நீண்ட கண்கள், வேறென்ன? என்று கேட்பதுபோல் பார்த்தன.

நான் அப்பால் செல்ல முயன்றபோது,

'வேறொன்றும் இல்லையா?' என்றாள் ஆவலுடன்.

'அதுபற்றி நான் பேசாததால் நீங்கள் புரிந்திருப்பீர்களென எண்ணிக்கொண்டேன். பெற்றோர் பிள்ளைகளை படித்துவா எனப் பள்ளிக்கு அனுப்புகின்றனர். படிக்க வேண்டிய வயதில் வெறும் பருவக் கோளாறால் ஏற்படுகின்ற உணர்வுக் கிளர்ச்சிகளுக்கு இடமளித்தால் படிப்புக் குழம்பிவிடும். உங்கள் திறமை ஆற்றல்களை நான் நன்கு புரிந்து வைத்துள்ளேன். இன்னும் சொல்வதாயின் உங்கள் மீது ஒருவகை ஈர்ப்பும், விருப்பமும் எனக்கும் உண்டு. முதலில் நாங்கள் படித்து உயர்வோம், மற்றயவை பற்றிப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம். எனக்கென குறிக்கோளும் இலட்சியமும் உண்டு. எனது வறிய பெற்றோருக்கு உதவ வேண்டும். தம்பியும், மூன்று தங்கைகளும் உள்ளனர். அவர்களுக்கு நான் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். எனது வாழ்க்கைத் துணையாக நீங்கள் வருவது எனக்கும் விருப்பம்தான். ஆனால் ஒரு பட்டதாரியாகவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றேன். ஆதலால் உணர்வுகளுக்கு முன்னுரிமை கொடுக்காமல் முதலில் படியுங்கள். பட்டம்பெறுங்கள். இயற்கை இணைத்தால் இணைந்துகொள்வோம்' என்றேன்.

ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்த அவளின் கண்களின் ஓரங்களிலிருந்து நீர் கசிந்தது.

'உங்கள் விருப்பத்தை என்னிடம் கூறியதால் உங்களை மலினமாக நான் நினைக்கவில்லை. இதுபற்றி வேறு எவருடனும் பேசவும்வேண்டாம். அதிகம் யோசிக்கவும் வேண்டாம். சொல்லப்போனால் முன்னரைவிட இப்போதுதான் உங்களை உயர்வாக எண்ணுகிறேன். அதிகமாக விரும்புகிறேன். இந்தத் துணிவும், தன்னம்பிக்கையும், வெளிப் படையான தன்மையும் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது' என்றுகூறி அனுப்பி வைத்தேன். அதன் பின்பும் பாடசாலை நிகழ்வுகளில் ஒன்றாகச் சேர்ந்து செயல்பட்டிருக்கின்றோம். அந்தத் தருணங்களில் ஒருவர் மீது ஒருவருக்கு நட்பும் மரியாதையும், உயர்ந்திருந்ததை உணர்ந்திருந்தேன்.



ஏ.எல் தேர்வில், நல்ல பெறுபேறு பெற்று, வைத்தியத்துறைக்கு பதிவு செய்துவிட்டு நான் காத்திருந்த காலத்தில், ஓ.எல்.தேர்வு எழுதிவிட்டு பெறுபேறுகளுக்காகக் காத்திருந்த தம்பி இனந் தெரியாதவர்களால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுவிட்டான். இராணுவ முகாம்களுக்கு அலைந்து திரிந்துகொண்டிருந்தோம். புலனாய்வாளர்களும் எம்மை விட்டபாடில்லை. நிலைமை மோசமாகப் போவதறிந்து, அம்மாவும் அப்பாவும்என்னைவலுக்கட்டாயமாக லண்டனுக்கு அனுப்பிவைத்தனர்.மருத்துவராயிருக்க வேண்டிய நான், அங்கு நள்ளிரவு வேளைகளிலும், பனிமூட்டங்களுக்குள்ளும் விழித்திருந்து வண்டி களுக்கு எரிபொருள் நிரப்பி – உழைத்து – அனுப்பிய காசில், கடனும் அடைத்து, வீடும் திருத்தம் செய்து வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தியது ஏனோ உண்மைதான். ஆனால்....

தம்பி எங்கே? அப்பாவின் உறுதியும், ஆளுமையும், ஆரோக்கியமும் எங்கே? சாய்வு நாற்காலியில் நாராய் படுத்திருப்பதைக் கண்டதும் எனக்கு அழுகையே வந்துவிட்டது.

நண்பன் தந்துவிட்ட பொருட்களுடன் அவன் தந்த முகவரியை ஒருவாறு தேடிக் கண்டுபிடித்து வீட்டின் உள்ளே சென்ற போது, எங்கள் வீட்டில் நான் கண்டதையும் விட மோசமான நிலையில் நண்பனின் அப்பா படுத்திருக்கிறார். மருந்து வில்லைகளும், தண்ணீர்ப் போத்தலும் அருகில் காணப்பட்டன. சாப்பிட்ட தட்டில் இலையான்கள் மொய்த்துக்கொண்டிருந்தன அவனது அம்மா ஒரு கந்தல் போலக் காணப்பட்டார். நண்பர் ஆசையாகத் தேர்ந்தெடுத்து வாங்கித் தந்த பொருட்கள் அவர்களுக்கு உபயோகப்படப்போவதில்லை என்பதை உணர்ந்து கொண்டேன். இவ்வாறு எத்தனை பெற்றோர்கள் இங்கு கவனிப்பில்லாதிருக்கிறார்களோ ..? என நினைத்து நின்றிருந்தபோது...

ஒரு பெண் வந்தாள். அவனது அக்காவாக இருக்கலாம்.

நான்லண்டனில்இருந்துவந்திருக்கிறேன். இந்தப் பொதியை உங்களிடம் கொடுத்து, அப்பா அம்மாவின் சுகமறிந்து புகைப்படங்கள் எடுத்துவர ஜெகன் சொல்லியிருக்கிறார்.'

தம்பி சொன்ன கண்ணன் நீங்களா? வாங்கோ உள்ளே. இப்பதான் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் இருந்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு கொடுத்துவிட்டு வந்தேன்' என்றாள்.

அப்படியென்றால்...

நீங்கள் பெற்றோருக்கு உதவியாக இங்கு வசிப்பதில்லையா?

எனது கணவன் அனுமதிப்பதில்லை. ஒரு தடவை தம்பியிடம் பண உதவி கேட்டிருந்தார். தம்பிக்கு முடியவில்லை போல. அத்தோடு விட்டவர்தான், அவ்வப்போது நான் வந்து பார்த்துக்கொள்வேன். என்றாள்.

அப்போ, இவர்களுக்கு யார் உதவி செய்வது?

ஒரு பெண்ணைச் சேர்த்திருந்தோம். மாதம் மாதம் சம்பளக் காசு வாங்கிப் போவாள். நன்றாகக் கவனிப்பதில்லை. என்னாலும், முழுநேரமாக தங்கியிருந்து கவனித்துக் கொள்ள முடியாத சூழ்நிலை “யாழ்ப்பாணம் இப்ப நல்லா மாறீட்டுது. அன்பு, பற்று, பாசம் , விசுவாசம் எல்லாம் காசின் பெறுமதியில் தான்” காசுக்காக எதையும் செய்யக் கூடியவாறு இன்றைய இளைஞர்களும் மாறிவிட்டார்கள். கட்டுக்கோப்பான தலைமைத்துவம் இல்லாமல் போனதால் எல்லாமே தான்தோன்றித்தனம்தான்.

அப்பா இப்போதுதான் குளுசை போட்டிட்டு தூங்குகிறார். இப்போது எழும்பமாட்டார் என்றாள்.

'நீ, இன்னமும் ஏன் இங்கு நிக்கிறாய்.. போ' என்கிறாளா என எண்ணிக்கொண்டு நண்பன் தந்த பொதியை அவளிடம் கொடுத்துவிட்டு திரும்பினேன். ஒரு எண்ணம் பொறிதட்டியது. கல்யாணியும் முல்லைத்தீவு தானே. இவளுக்குக் தகவல் ஏதாவது தெரிந்திருக்குமோ..! என எண்ணிக்கொண்டு இங்கே கல்யாணி என்றொரு பெண் வசிக்கிறாளா? தெரியுமா? எனக் கேட்டேன்.

இரண்டு மூன்று பேர் உள்ளனர். எனக்கூறி அவர்களது விலாசகுறிப்புக்களைச் சொன்னாள்.

மிகுந்த முயற்சியின் பலனாக கல்யாணியை கண்டேன். 32 சிறுவர்களைப் பராமரித்துக் கொண்டு இருந்தாள். அவளது ஒரு கால் பொய்க் காலாக இருந்தது. விளையாட்டுக்களில் சாதனைகள் புரிந்தவள், பொய்க்காலுடன் தாண்டி தாண்டி நடப்பதைப் பார்த்தபோது மனதுக்கு வலியாக இருந்தது. அன்றி.. அன்றி எனப் பிள்ளைகள் அவளைச் சுற்றிச் சுற்றிவர, அவர்களுடன் அன்பாகவும் மகிழ்வாகவும் இருந்தாள்.

என்னைக் கண்டதும் பிள்ளைகள் 'வணக்கம் ஐயா' என்றார்கள். நன்றாகத் தான் கற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கிறாள்.

'ஓ... கண்ணனா? எங்க இந்தப் பக்கம்? லண்டனிலை எண்டெல்லோ அறிஞ்சேன்.'

'ஓம் கல்யாணி, தம்பி காணாமல் போனபிறகு என்ர பெற்றோரின் வற்புறுத்தலால் நானும் போகவேண்டி ஏற்பட்டது. இருபது வருடங்கள் அப்பா, அம்மா, உறவுகள் என்று அன்பாகப் பழகியவர்களை பிரிந்து இயந்திர வாழ்க்கை. அப்பா, அம்மாவை பார்க்கவென வந்திருக்கிறேன். அவர்கள் மிகவும் உடைந்து போயிருக்கிறார்கள். இங்கே நண்பன் ஒருவன் தந்துவிட்ட பொதியை கொடுத்துவிட்டுப் போக வந்தேன். நீங்கள் எப்பிடி இருக்கிறீங்கள்?'

நான் சந்தோசமாகவும் மன நிறைவாகவும் இருக்கிறேன். யுத்தம் எனது காலை பலியெடுத்துவிட்டது. சமாளித்துக்கொண்டு என்னாலான பணிகளை எமது மக்களுக்குச் செய்து வருகிறேன். நீங்கள் தனியாகவா வந்தனீங்கள்?

தனியே இருப்பவர்கள் தனியாக தானே வரவேண்டும்.

திருமணம் செய்து கொள்ளவில்லையா?

மனதில் ஒருவரை வைத்துக்கொண்டு இன்னொருவருடன்... வாழமுடியுமா?

என்ன சொல்கிறீர்கள்?

எனது மனது முழுவதும் நீங்கள் தான் கல்யாணி.

உங்கள் இலட்சியங்கள்... கனவுகள்.. கோட்பாடுகள்?

எல்லாம் போச்சு. எல்லோரும் போய்விட்டினம் என எண்ணி வருந்திக் கொண்டிருந்தபோதுதான், இயற்கை மீண்டும் எங்களை சந்திக்க வைத்துள்ளது. முன்பொருமுறை 'இயற்கை இணைத்தால் இணைந்துகொள்வோம்' என்று நான் கூறியது உங்கள் நினைவில் இருக்கும்.

அந்த பட்டம் பெறும் நாட்களை எண்ணி காத்திருந்தேன். உங்கள் இலட்சியத் துணையாக வரவேண்டும் என்ற நம்பிக்கையுடன். எல்லாமே போச்சு. யுத்தம் கொடியது கண்ணா. கல்யாணி கண்களிலிருந்து கண்ணீர் பனித்தது.

கல்யாணி நாம் சந்தித்ததை நேர்மறையாக சிந்தித்துப் பாருங்கள்.

எனது படிப்பும், இலட்சியங்களும் ஒன்றும் நிறைவேறவில்லையே.

இப்பவும் ஒன்றும் இழந்துவிட வில்லை. நீங்கள் விரும்பினால் நாம் திருமணம் செய்யலாம்.

அது சரிவராது கண்ணன். நீங்கள் லண்டன் போக வேண்டியவர். நானோ இந்தப் பிள்ளைகளை விட்டு வரமுடியாதவள். முதிர் பருவ வயதுக்கு இருவரும் வந்துவிட்டோம். இவ்வளவு காலமும் ஒருவர் நினைப்பில் ஒருவர் வாழ்ந்தது போலவே தொடர்ந்தும் வாழ்ந்துவிடலாம்.

இல்லை கல்யாணி... நான் லண்டன் போகாமல் இங்கேயும் இருக்கலாம். எனது வருமானத்தில் ஒரு பகுதியை சமூக சேவைக்கென சேமித்து வைத்துள்ளேன். இங்கேயே உங்களுடனும், இந்தப் பிள்ளைகளுடனும், வாழ்ந்து அம்மா அப்பாவையும் பராமரித்துக் கொண்டு வாழவேண்டும் என்பதற்காகவே இயற்கை அழைத்திருக்கிறது.

நீங்கள் வீட்ட போய் மீண்டும் ஒரு தடவை யோசித்துப் பாருங்கள் கண்ணன். இருபது வருடங்கள் வசதி வாய்ப்புக்களுடன், ஆடம்பர வாழ்வுக்குப் பழக்கப்பட்ட உங்களால் இங்கு வாழ்வது கஸ்டம் கண்ணன். நீங்கள் சந்தோசமாக இருக்க வேண்டும் கண்ணன்.

எனது சந்தோசம் இந்தக் கைகளுக்கூடாகத் தான் வரும், வளரும் என்று கல்யாணியின் கைகளைப் பிடித்தேன். நெகிழ்ந்தாள். கைகளை இறுக்கினேன். நீண்ட விழிகளை அகலவிரித்து மந்தகாசமாகப் புன்னகைத்தாள்.

– மயூரதன் –

# ஆசிரியர் சேவையும் முதல் நியமனமும்

இலங்கையில் ஆசியர்சேவைக்கான புதிய நியமனங்கள் வழங்கும் போது நியமனத்தின் பின் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைகள் பற்றிய தெளிவுபடுத்தல்கள் குறைவாக காணப்படுவதுடன். ஆசிரியர்களின் நியமனத்தின் பின், முன்னெடுக்கப்படவேண்டிய நிறுவனம் சார் மீளாய்வுகள் வழிகாட்டல்கள் போதியளவு முன்னெடுப்புகள் ஒப்பிட்டு ரீதியில் குறைவாகவே காணப்படுகின்றன. ஆசிரியர் சேவையில் இணைவதற்காக காத்திருக்கும், ஆசிரியர் நியமனத்துக்கு முன்னராக பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறைகள், தொடர்பான விடயங்களை அறிந்து கொள்வதில் அதிக அக்கறை செலுத்துவதில்லை. இதனால் நியமனம் தொடக்கம் ஓய்வு பெறும்வரை பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

**அரச சேவையில் ஆசிரியர் நியமனத்தை பெற்ற ஒருவர் நியமனத்தை பொறுப்பேற்கும் போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் :**

1. உங்கள் நியமனம் தொடர்பாக நியமனக்கடிதத்தில் கூறப்பட்ட விடயங்களை தெளிவாக வாசிக்கவும்.
2. நியமனக்கடிதத்தில் குறிக்கப்பட்ட திகதியில் குறித்த பாடசாலைக்கு சென்று கடமையை பொறுப்பேற்றல் வேண்டும்.
3. உங்கள் நியமனம் அமுலுக்கு வருவது நீங்கள் கடமையைப் பொறுப்பேற்கின்ற திகதியில் இருந்தாகும்.
4. நியமனக்கடிதம் கிடைக்கப்பெற்ற திகதியில் இருந்து 14 நாட்களுக்குள் கடமையினை பொறுப்பேற்றல் வேண்டும்.
5. நியமனக்கடிதத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் கடமையினை பொறுப்பேற்காதவிடத்து பதவி உயர்வுக் காலங்களை கருத்தில் எடுக்கும் போது சில பின்னடைவுகள் ஏற்படலாம்.
6. குறிப்பிடப்பட்ட பாடசாலைக்குச் சென்று கடமையை பொறுப்பேற்று ஆசிரியர் தினவரவு (Attendance Register) பொது18 புத்தகத்தில் கையொப்பம் இடல் வேண்டும்.
7. கடமையினை பொறுப்பேற்ற விடயத்தினை பாடசாலையின் சம்பவத்திரட்டு புத்தகத்தில் (Log Book) எழுதி அதிபர் கையொப்பமிடல் வேண்டும்.
8. ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்புச் செயன்முறைப் படிவத்தினை பாடசாலையில் பெற்று, நிரப்பி தரங்கணிப்பிடுனரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. ஆசிரியர் அறிக்கைப் புத்தகத்தினை அதிபரிடம் பெற்று அதில் தங்கள் நியமனம் தொடர் பான விடயங்களை பதிவு செய்தல் வேண்டும் .
10. பாடசாலையில் பொதுவாக காணப்படும் சுயவிபரப் புத்தகத்தில் தங்கள் சுயவிபரத்தினை பதிதல் வேண்டும்.
11. கடமையினை பொறுப்பேற்று அதிபர் ஊடாக உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தை உரிய அதிகாரிகளுக்கு பதிவுத்தபால் மூலம் நியமனக்கடிதம் கிடைக்கப்பெற்ற திகதியில் இருந்து 14 நாட்களுக்குள் அனுப்பப்படல் வேண்டும். (தேவைக்கு ஏற்ப மூலப்பிரதிகளை பெற்றுக்கொள்ளவும்).
12. வலயக்கல்வி அலுவலகத்திற்கு சென்று தங்களுக்குரிய தாபனபடிவங்களை பெற்று அதனைப் பூர்த்தி செய்து வலயக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.
13. நீங்கள் பதவியேற்றுக் கொண்டது தொடர்பாக அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட பதவி ஏற்றல் கடிதமும், நீங்கள் பதவி ஏற்றுக்கொண்டது தொடர்பாக அதிபர் சம்பவத்திரட்டு புத்தகத்தில் எழுதிய அத்தாட்சிப்படுத்திய பிரதியையும் நீங்கள் தனிப்பட்ட முறையில் வைத்திருக்கும் உங்கள் சுயவிபரக்கோவைக்காக பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

குறிப்பு:- மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு தொடர்பாக சுய விபரக்கோவை ஒன்று தங்களால் பேணப்படு வது முக்கியமாகும்.

**சி. செந்தூரன்**

# ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பின் படி பரீட்சைக்கு தோற்றுவதற்கான வாய்ப்பு!

அரச சேவையிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட அரச சேவையின் ஏனைய சேவைகளில் உள்ள பட்டதாரிகள் அனைவருக்கும் ஆசிரியர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என கல்வி அமைச்சர் திரு.சுசில் பிரேம்ஜயந்த கடந்த 10ம் திகதி பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இதன்படி, இதற்கான அமைச்சரவைப் பத்திரம் எதிர்வரும் இரண்டு வாரங்களில் சமர்ப்பிக்கப்படும் எனவும், ஆசிரியர் பரீட்சை டிசம்பர் மாத நடுப்பகுதிக்குள் நடத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

2018, 2019, 2020, 2021 ஆண்டுகளில் அபிவிருத்தி உத்தி யோகத்தர்களாக நியமனம் பெற்ற பட்ட தாரிகளுக்கு பொதுப் பரீட்சை நடத்தி ஆசிரியர் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு முதலில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவர்களுக்கு வாய்ப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். 35 வயதில் அரச சேவையின் பிற சேவைகளில் உள்ள மற்ற பட்டதாரிகள் இந்த நோக்கத்திற்காக விண்ணப்பிக்க வேண்டும் எனவும்

நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன எழுப்பிய வாய்மூல கேள்விக்கு பதிலளிக்கும் போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த –

அரச சேவை பட்டதாரி ஆட்சேர்ப்பு திட்டத்தின் கீழ் 53000 பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். 2018, 2019, 2020, 2021 பட்டதாரிகள். அவர்களில் 22000 பேர் தற்போது பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ளவர்கள் அரச அலுவலகங்கள், திணைக்களங்கள் போன்றவற்றில் பணிபுரிகின்றனர். 41000 சம்பளம் வாங்குகிறார்கள். இவர்களை ஆசிரியர்களாக நியமிக்கும் போது 6700 ரூபா சம்பளம் அதிகரிக்கும். நீங்கள் சொன்னது போல் இங்கு பல பிரிவுகள் உள்ளன. நீங்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்களை நாங்கள் பரிசீலித்து வருகிறோம்.

**– கல்வியமைச்சர் –**

நான் சமர்ப்பித்த அமைச் சரவைப் பத்திரத்தின்படி தற்போது பட்டதாரி பயிலுனர்கள் அல்லது ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளவர்கள் 35 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். பட்டதாரிகள் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். 35 வயதில் தற்போது 300 பேர் பட்டதாரி பயிற்சி பெற்றவர்கள். அதன்படி, இந்த அனைத்து பிரிவினரும் பரீட்சைக்குத் தோற்ற வாய்ப்பு கிடைக்கும். அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ள 53000 பேர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றலாம். பாடசாலைகளில் பயிற்சி பெறுபவர்கள் மற்றும் அலுவலகங்களில் பணிபுரியும் அனைத்து பட்டதாரிகளுக்கும் சந்தர்ப் பம் கிடைக்கும். மேலும் தற்போது குறை ஊழியத் தொழில் செய்வோர் உள்ளனர். உயர்தரப் பரீட்சையில் நியமனம் பெற்றவர்கள் உள்ளனர். ஆனால் அவர்கள் தற்போது பட்டம் பெற்றுள்ளனர். அவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம். அது தவிர மற்ற அரசப் பணிகளில் உள்ளவர்கள் கிராம சேவகர்கள், பிற தொழில்களில் இருப்பவர்கள் அனைவருக்கும் ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த பரீட்சையை நாடளாவிய ரீதியில் நடத்துகிறோம். புள்ளிகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட பரீட்சைகள் நடத்தப்படும் மாகாணங் களுக்கு புள்ளிகள் வழங்கப்படும். இது வலயங்களுக்கும் வழங்கப்படும். அந்த நியமனங்களை உடனடியாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்கள் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, தேசிய கல்வி நிறுவகம் நடத்தும் பாடநெறியை முடிக்க வேண்டும் என அமைச்சர் தெரிவித்தார்.

# முல்லை மாணவர்கள் சாதனை!



கல்வியமைச்சின் பாடசாலை மாணவர்களுக்கு இடையே ஒக்டோபர் 22,23,24 திகதிகளில் நடத்தப்பட்ட தேசிய மட்ட மல்யுத்தப் போட்டியில் முல்லை வித்தியானந்தா கல்லூரி, முல்லை கலைமகள் வித்தியாலயம் மாணவர்கள் தங்கம் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இப் போட்டியில் வித்தியானந்தா கல்லூரி மாணவன் சு.றஜிதன் தங்க பதக்கத்தையும் (1ம் இடம்) கலைமகள் வித்தியாலய மாணவன் ஜெயானந்தராசா வினேசன்(51-55)மப பிரிவு வெள்ளிப் பதக்கத்தையும் (2ம் இடம்) பெற்றிருந்தனர்.

## கல்வி விளையாட்டு குறிப்புகள்

### சாதனை படைத்த வவுனியா மாணவிகள்!

இலங்கை பளுதூக்குதல் சம்மேளனத்தால் நவம்பர் மாதம் 10, 11 ஆகிய இரு நாட்களும் பொலனறுவையில் நடத்தப்பட்ட தேசிய பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் - 2022 போட்டியில் வவுனியா பளுதூக்கல் கழகத்தை சேர்ந்த தி.கோசியா இரண்டாம் இடத்தையும், நி.சுஸ்மிதாகினி மூன்றாம் இடத்தையும், பா.செரோண்யா ஆகியோர் பதக்கங்களை பெற்று சாதனை படைத்துள்ளனர்.



## ராஜீவ் வழக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு மகிழ்ச்சியோடு வரவேற்று பாராட்டுகின்றது.

இவர்களுடைய விடுதலைக்காக பாடுபட்ட தமிழக அரசு உட்பட அனைத்து தரப்பினருக்கும் நன்றியையும் தெரிவிக்கின்றது. இந்த வழக்கின் தீர்ப்பை முன் மாதிரியாக கொண்டேனும் இலங்கை சிறைகளில் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 12,000 முன்னாள் போராளிகள் சமூக மயமாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. தொடர்ந்து அரசியல் கைதிகளின் நன்னடத்தை அடிப்படையில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த போது அவரை கொலை செய்வதற்காக முயற்சித்தவர் என பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த ஒருவர் விடுதலை செய்யப்பட்டார்.

அதேபோன்று கோத்தாபய ராஜ பக்ச ஜனாதிபதி காலத்திலும் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட 16 பேர் விடுவிக்கப்பட்டதையும் நாம் அறிவோம். தற்போதைய ஜனாதிபதியும் அண்மையில் சிலருக்கு விடுதலைக்கு அனுமதி அளித்திருந்தார். இதற்கு இவர்களின் நன்நடத்தையும் ஒரு காரணமாகும்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தற்போது நீண்ட காலம் சிறைகளில் வாடும் அரசியல் கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் எந்த ஒரு காலகட்டத்திலும் சிறைச்சாலை நிர்வாகத்திற்கு எதிராகவோ, அரசுக்கு எதிராகவோ எதனையும் செய்யவில்லை. நன்னடத்தை மிக்கவர்களாகவே காணப்பட்டுள்ளனர்.

அரசியல் கைதிகள் தங்களின் விடுதலையை வலியுறுத்தி நிர்வாகத்திற்கு முன் அறிவிப்பு செய்தே பல்வேறு கால கட்டங்களில் சிறைச்சாலை பொருட்களுக்கோ அல்லது வேறு எதற்குமோ எந்த விதமான சேதங்களையும் ஏற்படுத்தாது அமைதி போராட்டங்களையே நடத்தியுள்ளனர்.

இப்படி போராட்ட காலத்தில் சிறந்த ஒழுக்க நெறியை கடைப்பிடித்துள்ளனர். தொடர்ந்து சிறைச்சாலை நிர்வாகத்தின் நன்மதிப்பை பெற்றவர்களாகவே உள்ளனர்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் பலர் ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலமே குற்றவாளிகள் ஆக்கப்பட்டு தண்டனை அனுபவிப்பவர்களாக உள்ளனர்.

இதனை கருத்தில் கொண்டும், தமிழக அரசை போன்று தமிழ் மக்களின் நீண்ட கால கோரிக்கையான அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் எனும் குரலுக்கு செவிமடுத்தும், அரசியல் கைதிகளின் நன்நடத்தையை அடிப்படையாகக் கொண்டும் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட அரசு அவசர நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

அதுவே அரசின் மீதான நம்பிக்கைக்கு வழிவகுக்கும். பொருளாதார வீழ்ச்சியடைந்திருக்கும் இந் நேரத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கும் இவ்வேளையில் அதற்கு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை துணை செய்யும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## படையினருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் யாருக்கும் தனித்தனியாக, காணி சுவீகரிப்பு தொடர்பில் கடிதம் அனுப்பவில்லை என்று ஆளுநர் இங்கு பொய் கூறினார்.ஆகவே நாம் ஒன்றை மட்டும் சொல்லுகின்றோம், ஆளுநரின் இத்தகைய அடாவடியாக செயற்பாட்டுக்கு நாம் ஒரு போதும் அஞ்ச மாட்டோம். தமிழ் மக்களின் நிலங்களின் ஒரு துளியையும் சிங்கள பேரினவாத கும்பலுக்கு வழங்க அனுமதிக்கமாட்டோம் என்றார்.

இதேவேளை – மக்களின் காணிகளை அபகரித்து, படையினருக்கு வழங்குவதாக தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்களை பொலிசார் இழுத்து வீழ்த்தியிருந்தனர். கூட்டத்துக்கு வருகை தந்த முப்படைகளை உள்ளே நுழையவிடாமல் மக்கள் தடுத்தனர். இதன் போதும் பொலிஸார் போராட்டக்காரர்களுடன் இழுபறிப்பட்டனர். இதன் போது பெண் ஒருவரின் ஆடை கிழிந்தமையால் குறித்த இடத்தில் பதற்றநிலை ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## சமஸ்டியை ஏற்றுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்திவாரத்தையே போட்டிருந்தார். இப்படியாக பேச்சுவார்தையில் அமர்ந்திருந்த விடுதலைப்புலிகள் அமைப்பை முடக்குவதற்குரிய செயலையே செய்திருந்தார்.

2015 இல் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தபோது, மிகத் தெளிவாக ஒற்றையாட்சி அரசியலமைப்பை தயாரித்து, சட்டத்தில் அறிமுகமே இல்லாத ஒருமித்த நாடு என்ற போலி வார்த்தைப் பிரயோகத்தைப் பயன்படுத்தி, தற்போது இருக்கும் ஒற்றையாட்சியை விட இறுக்கமான ஒற்றையாட்சியை ஏற்படுத்தும் இடைக்கால அறிக்கையைத்தான் தயாரித்திருந்தார். இதே ரணில் விக்கிரமசிங்க சிறிலங்கா பொதுஜன பெரமுனை கட்சியின் ஆதரவோடுதான் இன்று ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். சிறிலங்கா பொதுஜன பெரமுனவினுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் 13ம் திருத்தச் சட்டத்தையே நிராகரிக்க வேண்டும் என்னும் நிலைப்பாட்டில் இருப்பவர்கள். சிறிலங்கா பெரமுனயின் கோட்டபாய ராஜபக்ஸ ஜனாதிபதியாக இருந்தபோது, நிபுணர் குழு ஒன்றை நியமித்தபோது, அந்தக் குழு 13ம் திருத்தம் என்று பெயருக்காக இருக்கக்கூடிய – வெறும் கோதாக இருக்கின்ற – 13ஆம் திருத்தச் சட்டத்தை வேண்டாம் என்பதே அவர்களுடைய கொள்கையாக இருக்கிறது. இந்தத் தரப்பினுடைய வாக்கை நம்பியே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக உள்ளார்.

ஐ.தே.க. சார்பில் தேசிய பட்டியல் ஊடாக கிடைத்த ஒரேயொரு ஆசனத்தை பெற்று ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றம் வந்த போது, இலங்கையில் சமஷ்டியாட்சியை ஏற்படுத்துவது நடைமுறைக்கு சாத்தியமில்லையென, என்னிடம் தெரிவித்திருந்தார்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கும் நிலையில், சிறிலங்காவை மீட்டெடுக்க முயலும் சர்வதேச தரப்புக்கள், ஆகக்குறைந்தது அரசியல் ஸ்திரத்தன்மையையாவது எதிர்பார்க்கிறார்கள். ஒட்டுமொத்த நாட்டிலும் இருக்கக் கூடிய ஏனைய இனங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில், அரசியல் நிலைமைகள் மாற்றியமைக்கப்படும்போதுதான், சர்வதேசம் வழங்கும் பாரிய நிதிஉதவிகள் வீண்போகாமல் இருக்கும் என நம்புகிறார்கள். சிறிலங்கா அரசின் பொருளாதார எதிர்காலம் வடக்கு கிழக்கு மக்களின் ஒத்துழைப்புடன்தான் பயணிக்க முடியும் எனவும், பாதுகாப்புக்கு தொடர்ந்தும் நிதியை வீணடிக்கமுடியாது என்றும் அழுத்தங்களைக் கொடுக்கிறார்கள். இவ்வாறு சர்வதேசத்திடமிருந்து நிதி உதவிகளை பெற்றுக் கொள்வதற்காகவே அவசரமாக இந்த அழைப்பை ரணில் விக்கிரமசிங்க விடுத்திருக்கின்றார்.

சிறிலங்கா அரசினுடைய பொருளாதாரம் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குரிய தீர்வில்தான் தங்கியிருப்பதை அப்பட்டமாக விளங்கிக் கொள்ளமுடியும்.

ஆகவே தமிழ்க் கட்சிகள் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் பேசுவதாக பேச்சுவார்த்தை மேசையில் போய் உட்காருவது தான் சிறிலங்கா அரசாங்கத்துக்கு தேவைப்படும் விடயமாக இருக்கிறது. அதற்கு அப்பால் பேச்சுவார்த்தையில் ஒரு இணக்கப்பாடு வருகின்றதா? இல்லையா? என்பது இரண்டாம் கட்டம். பேச்சுவார்த்தை மேசையில் உட்கார்ந்தால் சிறிலங்கா அரசை முற்றுமுழுதாக பிணையெடுத்துக் கொடுக்கும் விடயமாக இருக்கின்ற இந்த சூழலில், தமிழ்க் கட்சிகள் இந்த சந்தர்ப்பத்தை பேரம் பேசி மிகத் தெளிவான வாக்குறுதிகளைப் பெறக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக எடுக்க வேண்டும் என்பதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணின் நிலைப்பாடாகும்.

அந்த வகையில் – ஏற்கனேவே ஒற்றையாட்சியை வலியுறுத்தி, சமஸ்டியை நடைமுறைச் சாத்தியமில்லை என்று கூறியிருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க தரப்புடன் பேசுவதாக இருந்தால், ஆகக் குறைந்த பட்சம் ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் நேர்மையாக – இந்த ஒற்றையாட்சிக்குள் இனப்பிரச்சனை தீர்க்கப்படமுடியாது என்பதை ஏற்றுக் கொண்டு – நாட்டைப் பிரிக்காமல் சமஸ்டியை முழுமையாக அடையக் கூடிய ஒரு பேச்சுவார்த்தைக்கு தான் தயார் என, ரணில் விக்கிரமசிங்க கூறாமல், தமிழ் தரப்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளுமாயின், பேரம் பேசுவதற்கு இன்றைக்கு இருக்கக்கூடிய மிகச்சிறந்த பேரம்பேசலை தமிழ் இனம் பாழடித்ததாகவே வரலாறு அமையும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ரணில் விக்கிரமசிங்கவும் ஒரே நிகழ்ச்சி நிரலில் தான் செயற்படுகின்றார்கள். ரணில் விக்கிரசிங்க அழைப்பு விடுத்திருக்கும் இந்த நேரத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏதோ தாங்கள் சமஷ்டி தீர்வில் உறுதியாக இருப்பவர்கள் போன்று காட்டி, பேச்சுவார்த்தைக்கு போவது மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது நோக்கமாகும். கடந்த 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது, நாட்டில் சமஷ்டியை ஏற்படுத்துவதாக கூறி, நல்லாட்சி அரசாங்கத்திடம் பேரம் பேசக்கூடிய மக்கள் ஆணையை எமக்கு பெற்றுத் தாருங்கள் என வட கிழக்கு தமிழ் மக்களிடம் கேட்டுக்கொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பினர், அந்த ஆணைக்கு மாறாக ஒற்றையாட்சிக்கு இணங்கிருந்தனர். அன்று இறுதி சந்தர்ப்பமொன்றை வழங்குமாறு வட கிழக்கு மக்களிடம் வாக்குகளை கேட்டுக் கொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பினர், எந்தவித பேரமும் பேசாமல் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டமை போலவே, இன்றும் தமிழ் மக்களை ஏமாற்ற முயல்கின்றனர். பேச்சுவார்த்தை மேசைக்கு போய், தாம் சமஸ்டியில் உறுதியாக இருக்கிறோம் என்று கூறி, உத்தரவாதம் எதுவுமில்லாமல் – பேச்சுவார்த்தை மேசையில் போய் உட்கார்ந்து – இந்த அரசாங்கம் இனப்பிரச்சினைக்குரிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக சர்வ தேசத்துக்கு காட்டி – அரசாங்கம் நிதியுதவியைப் பெறுவதற்கு அரசாங்கத்தைப் பிணையெடுத்துக் கொடுப்பதற்காக, நடத்தும் நாடகமாகவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முயற்சி உள்ளது என பொறுப்போடு மக்களுக்கு கூறுகின்றோம். எந்த விதமான உத்தரவாதமும் இல்லாமல் பேச்சுவார்த்தை மேசையில் போய் உட்காருவது என்பது இந்த இனத்துக்கு செய்யக் கூடிய மிகப் பெரும் துரோகமாகும் எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடக சந்திப்பின் போது தெரிவித்திருந்தார்.

## அரசியல் விபச்சாரம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோற்றுப் போனவர்களாகிவிட்டனர். தோல்வியை ஏற்றுக்கொண்டு கூட்டமைப்பின் தலைவராக செயற்படும் இரா.சம்பந்தன் உடனடியாக பதவிவிலக வேண்டும் என்று வவுனியாவில் நடைபெற்ற சந்திப் பொன்றில் மேலும் தெரிவித்தார்.



ஐயான்ஸ்

குளிர்களி உற்பத்தியும்
நடமாடும் விற்பனையும்

முகவரி : உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்
தொடர்புகளுக்கு : 077 618 4602

யாழ் நகரில் 25வருட கால அனுபவமிக்க கைக்கடிகாரங்கள் திருத்துனரும், விற்பனையாளரும்..! மின்சாரப் பொருட்கள் விற்பனையாளரும்...! இன்றே நாடுங்கள்

யாழ் சதீஸ் எலக்ரோனிக்ஸ் & வோச் வேக்ஸ்

இல 55, 57 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 077 613 6007

